தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௬	மலர்
௪௰	குரோதி, தை. 1965 ஜனவரி	௰.

அலைகடலே!

(ச. பாலசுந்தரம்)

1 அலைகடலே! ஆரணங்கே! அடடா! நீ செய்த
அறிவில்லாச் செயல்கண்டே அகங்கலங்கு கின்றோம்
நிலைதெரியா ஆழமுறு நெடுங் கடலே! சிறிதும்
நீதிதெரி யாயோ? நீ பெற்றநில மகளைக்
கொலைபுரிந்து விழுங்குமொரு கொடுமைநினைக் கியல்போ?
கூற்றுவனை அலைநாக்கில் கொண்டிருக்கின் றாயோ?
கலையழகின் காட்சியொடு கார்முகிலுக் களிக்கும்
கருணையுளந் தவிர்ந்துகர வெப்பொழுது கற்றாய்?

2 தென்குமரி நாடனைத்தும் தின்றுவிட்ட பின்பும்
தீரவில்லை பசியுனக்குத் தாயா நீ பேயா?
முன்புபுகார் நகரத்தை முழுதுமெடுத் துண்டாய்
முந்நீரே பின்னும்உன் பசிபோக விலையோ?
"இன்புறுதென் கோடி தனுக் கோடி"எனப் போற்றி
ஏத்தியுனைப் பூசித்து வழிபட்டு வந்தோம்.
அன்பில்லாக் கொடுங் காற்றை அலைக்கரத்தால் வீசி
அறமல்லாச் செயல்புரிந்திங் கதிர்ச்சியுறச் செய்தாய்

3 கண்ணில்லாக் கருங்கடலே! கயமைபுரிந் தாயே!
கரைகடத்தல் கற்புடைமைக் கிழுக்கென்ப தறியாய்?
தண்ணென்ற குணமுடையாய் என்றெண்ணிக் களித்தோம்
காலனுக்கு மக்களை நீ ஏன்காட்டிக் கொடுத்தாய்?
மண்ணென்னுந் தோழியுனக் கென்னகுறை செய்தாள்?
மண்டியவள் மேனியினை ஏனழித்துக் கொன்றாய்?
எண்ணற்ற தாய்தந்தை பித்தேற ஐயோ!
இளங்குழவிப் பயிர்களைஏன் இரையாக்கிக் கொண்டாய்?

4 "கடல் சுவற வேலெறிந்த பாண்டியனிங் கில்லை
கன்னியெனை அடக்குவதற் கியாருமிலை" என்று
மடமையினால் அறமல்லாச் செயல்புரிந்தாய் போலும்
மடவாரின் கண்ணீரால் நீவற்றிப் போவாய்
உடமையெலாம் பறிகொடுத்தும் உறவினரைக் கொடுத்தும்
உயிர்ப்பிணமாய் உழலுபவர் உரைத்தீயால் வேவாய்
கடமையறி யாக்கடலே! தமிழகத்தோ டீழம்
கலங்கியுளம் சுழலஒரு பெரும்பழியேன் செய்தாய்?

5 அடித்தாலும் தாய்மடியே தஞ்சமெனப் பற்றி
அழுங்குழவி ஒப்போம்உன் அருஞ்சினத்தை மாற்றி
துடித்தலறும் ம்க்களுக்குத் துணைபுரிவாய்த் தாயே!
துன்பமினிப் பொருத்திடல்எம் மால்முடியா தம்மா
"படித்தலத்தை இனியென்றன் அலைக்கையால் பற்றிப்
பருகே" னென் றுறுதிமொழி பகர்ந்திடுவாய் அம்மா
மடித்தலத்தில் எமைஏந்தி வாழ்விப்பாய் தாயே!
மாகடலே மழையாகி உயிர் வளர்ப்பாய் இனியே!

மங்கலதேவிக் கோட்டம்

வித்துவான், சி. கோவிந்தராசனுர்
தமிழ் விரிவுரையாளர்
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்–2

சிலப்பதிகாரத்திலுள்ள செய்திகள் அனைத்தும் உண்மையென்று ஆராய்ச்சியாளர் கொண்டிலர். அதன்கண் பொதிந்து கிடக்கும் கண்ணகி கோவலன் பற்றிய உண்மை வரலாற்றினை, பழம்பொருள் ஆராய்ச்சியின் வழியே முயன்று கண்டு தொகுத்துக்கொள்ள வேண்டியதும் தமிழக வரலாற்றுண்மைக்கு இன்றியமையாததொன்ருகும். எனவே, பழந்தமிழ் இலக்கியமாம் சிலப்பதிகாரத்திலுள்ள உண்மை வரலாற்றினை, பழம்பொருள் ஆராய்ச்சியின் வழியே முயன்று காணக்கூடுமாயின் அவ்வுழைப்பு, தமிழக வரலாற்றுக்கும் தமிழ் மக்களுக்கும் மிக்க சிறப்பினை அளிப்பதாகுமன்ரே! இச்சிறு எண்ணமே என்னுடைய முயற்சிக்கு இலக்காகி, சிலம்புகண்ட சின்னங்களையும், வழிகளையும், ஊர்களையும், கோட்டங்களையும் இருபதாண்டுகளாகவே ஆராய்ச்சி செய்து, தக்க சான்றுகளுடன் கண்டுபிடித்து மகிழ்ச்சியடைந்தேன். அவ்வுண்மைகள் தமிழக வரலாற்றிலும் இடம் பெறவேண்டும் என்ற பொதுநோக்குடனேயே 'புகார் முதல் வஞ்சிவரை' என்ற தலைப்பில் தொகுப்பாக வெளியிடலானேன்.

சிலம்பின் செய்தி

மதுரையையும் தென்னவன் கொற்றத்தையும் மணியரிச் சிலம்பொன்றைக் கையிலேந்திய கண்ணகி பழித்தாள். பாண்டியன் அவையில் சிலம்பை உடைத்து தன் கணவன் மீது நீதி தவறி சுமத்தப்பட்ட பழியை துடைத்தெறிந்தாள். பத்தினிதேவியாம் கண்ணகியின் துன்பம் உயர்ந்தது. மதுரையும் பாண்டியன் ஆட்சியும் சிதைந்தது. மதுரையின் கிழக்குவாயில் வழியாக கோவலனுடன் மதுரைக்கு வந்த கண்ணகி தமியளாக மேற்குவாயில் வழியாக, துர்க்கைக் கோயில் வாயிலிலே தன்னுடைய கைவளைகளைத் தகர்த்து உடைத்துவிட்டு, நிலைகுலைந்து புறப்பட்டாள். 'என் கணவனைக் காணும் துணையும் ஓரிடத்தும் இருத்தலும் இரேன், நிற்றலும் நில்லேன்" என்றுகூறி இரவுபகல் ஓயாது வையைக்கரையை வழியாகக்கொண்டு மேடென்றும் கிடங்கென்றும் பாராமல் மேற்றிசை நோக்கிச்சென்று, நெடுவேள் குன்றம் அடிவைத்து ஏறி ஒரு வேங்கை மரத்து நிழலில் நின்ருள். மதுரைமா தெய்வம் வகுத்துக்கூறிய பதினலாம் நாள் மாலையில், கோநகர்பிழைத்த கோவலன் தன்னெடு மலைவாழ் குறவர் காண வானவூர்தியேறி பொன்னுடு புகுந்தாள். இதுவே, சிலப்பதிகாரம்தரும், மதுரையிலிருந்து தொடரும் கண்ணகியைப் பற்றிய வரலாற்றுச் செய்தி.

வையைக் கரை வழியும் - நெடுவேள் குன்றமும்

சிலப்பதிகாரச் செய்தியை அடிப்படையாகக் கொண்ட யான் வையையின் தென் கரையைப் பின்பற்றிய நிலையில், ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் சென்று ஆராய்ச்சி செய்யலானேன். இதன் பயனாக வையையின் தென்கரைப் பகுதி நாகமலைத்தொடரின் சார்பினோடு அமைந்திருப்பதினால் சிலம்பின் செய்திகட்கு இப் பகுதியே இலக்காகுமென்று கண்டு மேலே செல்லலானேன். வையையின் கரைவழி எல்லை கம்பம், பள்ளத்தாக்குள் சென்று முடிவடைகின்றது. இங்கு சுருளிமலை, ஆண்டிபட்டிமலைத் தொடர். வண்ணாத்திப்பாறையெனும் மேலைமலைப்பகுதி ஆகிய மலைகள் குதிரை இலாட வளைவில் தொடர்ந்து சூழ்ந்து உயர்ந்து நிற்க, இடையே உள்ள பள்ளத்தாக்கே கம்பம் பள்ளத்தாக்கின் மேற்குப் பகுதியாகும். இப்பகுதியை வர்ஷநாடு என்று வரலாறுகள் கூறுகின்றன. இவ்வர்ஷ நாட்டில் வையை உற்பத்தியாகி மலையிலிருந்து தரைக்கு வருகின்றது. வையை ஆற்றின் கரைகளுள் ஒரு கரையைப் பின்பற்றி வருவதாயினும் இப்பகுதிக்கே வந்தாக வேண்டும். மேல், சூழ்ந்துள்ள மலைமேல் ஏறத் தொடங்குவதைத் தவிர வேறு வழியே இல்லை. எனவே, இவ்வளவும் வந்த கண்ணகி மலைமேல் ஏறத்தொடங்கியுள்ளாள். இப் பகுதிக்குரிய மலை இன்று சுருளிமலை என்று பெயர் பெறினும் அங்குள்ள பழமையான இலச்சினைகளால் முருகன் இடங்கொண்ட மலை என்பது தெளிவு. எனவேதான், இளங்கோவடிகள் அக்காலத்தில் இடப்பட்டிருந்த பெயரால், நெடுவேள் குன்றம் என்று சுட்டிக் கூறியுள்ளார்.

வர்ஷநாடு என்று கூறப்பெறும் இப் பகுதியில் கண்ணகியைப் பற்றிய செய்திகளோ சுவடுகளோ மக்கள் வழியே கிடைக்கவில்லையாயினும், ஒரு கல்வெட்டுச் செய்தி நன்கு குறிப்பதாயிற்று. அக் கல் வெட்டில் மங்கலதேவி கோட்டத்துக்குரிய நிபந்தங்கள் கூறப் பட்டிருந்தன. சிலம்பில் கண்ணகியை மங்கலதேவி என்று குறிக்கப் பட்டிருப்பது அறிஞர் அறிந்ததேயாம். எனவே அக்கோட்டத்தை ஆராய முற்பட்டேன். அங்குள்ள திரு இராசன் என்னும் ஆசிரியர் வழியாக, மலையின்மேல் காளல் எனும் அடவி சூழ்ந்த பகுதியில் மங்கலதேவி கோட்டம் இருப்பதை அறிந்து கொண்டேன். அக் கோட்டம் சிலப்பதிகாரச் செய்திகட்குத் தொடர்புடையதா என்பது பற்றி பழம் பொருள் ஆராய்ச்சியின் வழியே பார்க்க முற்பட்டேன்.

கி. பி 1963-ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் பதினாறும் நாள், என்னுடன் தொடர்ந்து வரலாற்றாராய்ச்சியிற் பங்கு கொண்டு வரும் மாணவர் முத்து கந்தசாமி என்பவருடன் கம்பம் பள்ளத்தாக்கிற்குச் சென்று, நெடுவேள் குன்றத்தைச் சார்ந்துள்ள கீழக் கூடலூரில் தங்கி மங்கலதேவிக்கோட்டத்தைப் பற்றிய அரிய செய்திகளைக் கேட்டு அறிந்து கொண்டேன்.

மறுநாள், 17—11—1963, காலை ஐந்து மணியளவில், மலையின் மேல் சென்று கோட்டத்தினை ஆராய்ச்சி செய்ய முற்பட்டேன்.

அதுபோது, மாணவர் முத்து கந்தசாமி, ஆசிரியர்கள்- இரா. கணபதிராசன், சு. பெ. பொன்னுராமன் B.SC, சிவமூர்த்தி, மு. ஐயர், கா. கணபதி, ஆகியோருடன், மருந்து அங்காடி உரிமையாளர் தா. இராமசாமி, தி. ஒட்டி வீரு, பெரியமாயன், வேட்டைக்காரர் சீ. இராமர் ஆகிய இளைஞர்களும் மங்கலதேவிக் கோட்டத்தைக் காணும் ஆர்வத்துடன், உறுதுணையாகவும் வந்தனர்.

அடிவாரமும் மலைப்பகுதியும் யானைகளில் புழக்கம் மிகுந்த இடங்களாகும். மலை வழியும் போதை என்னும் ஒருவகைக் காட்டுப்புல் பத்தடி உயர அளவிலும் வளர்ந்து மூடிக் கிடக்கும் காட்டுப்பகுதியாகும். சிறுத்தைப்புலிகளுடன் கரடிகளும் வாழ்ந்து வரும் காட்டுப் பகுதி. எந்தநேரத்திலும் துன்பம் எதிர்பாராமல் நேரிடக் கூடும். மலையிலும் வழியில்லை வழி செய்து கொண்டே மேலே செல்ல வேண்டும். இடையே இரண்டு செங்குத்தான நெடிய ஏற்றங்கள். சுருங்கக் கூறின், உறுதியொன்றையே துணையாகக்கொண்டு நண்பர்களுடன் இவற்றை எல்லாம் கடந்து நான்கு கல் அளவிற்கு மேற்பட்ட மலை ஏற்றத்தையும்கடந்து மஞ்சு என்று கூறப்பெறும் மேகப் படலம் படிந்து சூழ்ந்த சூழலிடையே, செறிந்த அடவியொன்றின் நடுவே உள்ள மங்கலதேவிக் கோட்டத்தை அடைந்தோம்.

கோட்டம் சேரநாட்டெல்லைக்கு உள்பட்ட அளவில் அமைந்துள்ளது. மிக்க பழமையோடு கூடிய சிறு சிறு கோயில்கள் கல்லறை வடிவிலும் சிறிய மண்டபத்துடன் கூடிய அறைவடிவிலும் இருக்கின்றன. சில சிதைந்து கிடக்கின்றன. சில இடிபாடுகளுடன் புதரடைந்து கிடக்கின்றன. நான்கு கருங்கல் அறைகள் உள்ளே முழுமையான திருமேனியோ, படிமமோ இன்றி இடிபாடுகளுடன் புதரடைந்து நிற்கின்றன. ஒன்றில் பழைய வட்டெழுத்தாலான கல்வெட்டு இருந்தது. படியெடுத்துக் கொண்டேன். மற்ற இடங்களில் பிற்காலப் பாண்டியரின் கல்வெட்டுகள் சிதைந்த நிலையில் இருந்தன. அவற்றையும் படியெடுத்துக் கொண்டேன். ஓரிடத்தில் புதையுண்டிருந்த கல்லில் கோட்ட அமைப்பினைச் சிறிய வடிவில் பொறிக்கப்பட்டிருந்தது. அதனையும் பிரதி செய்து கொண்டேன். இயன்ற அளவு சூழல்களையும், கோட்டத்தினையும், சிதைந்த சின்னங்களையும் புகைப்படமாகவும் எடுத்துக் கொண்டேன். எந்த நேரத்திலும் விலங்குகளால் துன்பம் நேரக்கூடும் என்னும் அச்சமும், அட்டை எனும் பூச்சிக்கடியினுல் தொந்தரவும், மழை, குளிர்க் காற்றுடன் வீசியதால் உண்டான உடல் நடுக்கமும், ஆகிய இயற்கையின் இடர்ப்பாடுகளுக்கிடையே, இயன்ற அளவில் மிக முயன்று ஓரளவு ஆராய்ச்சி செய்து, திருவருள் துணையால் உயிருக்குத் துன்பமின்றி நண்பர்களுடன் மீண்டேன்.

ஆராய்ச்சிக் கருத்துரை

மங்கலதேவிக்கோட்டம் பற்றிய என்னுடைய ஆராய்ச்சி முடிபின் கருத்துரைக்குரிய விளக்கத்தினை தக்க சான்றுகளுடன்

அமைதியாக எழுதுவேன். இன்றியமையாத காலங்கருதியே 'புகார் முதல் வஞ்சி வரை' என்ற தலைப்பில் தொடர்ந்த கட்டுரையைச் சுருக்கமாக முடித்துள்ளேன்.

சிலப்பதிகாரம் கண்ட மங்கலதேவியாம் கண்ணகிக்குரிய கோட்டமாகவோ; அன்றி, தொன்மையாகவே பத்தினிப் பெண்டிரைத் தமிழகம் போற்றத் தொடங்கியதற்குரிய நினைவுச் சின்னமாக, பண்டைச் சான்றோரால் அமைக்கப்பட்டிருந்த பத்தினிக் கோட்டத்தில் கி. பி. முதல் நூற்றாண்டிலோ இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ பத்தினித் தெய்வமாக விளங்கிய கண்ணகிக்கும், நினைவுச் சின்னம் எழுப்பப்பட்ட கோட்டமாகவோ, கொள்ளற்குரிய தகுதிகளே பெரும்பான்மையும் இருப்பதால், இடம் சூழ்நிலை, பழமை, சின்னங்கள், கல்வெட்டுகள், அமைப்பியல்புகள் இலக்கியங்களில் விளக்கப்பெறும செய்திகள், ஆகியவற்றைக் கொண்டு, காவியங் கண்ட கண்ணகிதேவியின் வரலாறு பற்றிய மங்கலதேவிக் கோட்டமெனும் சின்னத்தினைப் பழம்பொருள் ஆராய்ச்சியின் வழியே முதன்மையாக தமிழக வரலாற்றுக்கு அறிமுகம் செய்கின்றேன்.

இக்கருத்து, வரலாற்றுக்குரிய இயல்பு பெறினும், சிலப்பதி-காரத்தில் வரந்தருகாதையுள் கூறப்பெறும் (வரி-53, 88) மங்கல மடந்தை கோட்டமென்பதற்கு. இளங்கோவடிகள் தரும் விளக்கம் அப்படியே சுவையுடன் உள்ளவாறு அமைந்திருப்பதால், சிலப்பதி-காரம் கண்ட மங்கல மடந்தைக் கோட்டம் என்பது தேற்றமாகும்.

இது வரையில் வந்துள்ள ஆராய்ச்சிக் குறிப்புகளிலோ, கண்ணகிபற்றிய வரலாறுகளிலோ சுட்டிச் சொலப்பெறாதிருந்த ஓர் உண்மை வரலாற்றிடத்தை, என்னுடைய இருபதாண்டு முயற்சியின் பயனாகக் கண்டு முதன் முயற்சியாகக் கூறப்பெறுவதால், மேலும் ஆராய்ச்சி செய்தல் இன்றியமையாத தொன்றும். அதனையும் வாய்ப்பு ஏற்படும்போது கண்டு திட்டமாகக் கூறுவேன். எப்படியாயினும், கிடைத்துள்ள சான்றுகளளவில் சிலப்பதிகாரம் கண்டுள்ள பத்தினிக்கோட்டமாகவோ; மங்கலதேவிக்கோட்டமாகவோ ஆவது உண்மையும் உறுதியுமாகும்.

மதுரை மானுவலிலோ, பிற பழைய குறிப்புகளிலோ மங்கல தேவிக்கோட்டத்திற்கும் சிலப்பதிகாரச் செய்திகட்கும் தொடர்பான செய்திகள் கூறப்பெறவில்லை. ஒரு நாட்டு எல்லைகுட்பட்டிருப்பதால் அதை சர்வே செய்து, பழைய கற்கட்டடங்கள் அலலது கோயில்கள் இன்ன இடத்தில் இன்ன பெயரில் இருக்கின்றன என்பதைத் தவிர வேறு குறிப்பு பழமையான சுவடிகளிலும் இருப்பதாக என்னறிவுக்குத் தெரியவில்லை. அவ்வாறு இருந்திருக்குமானல், தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் உறுப்பாக நிற்கும் சிலப்பதிகாரத்தின் உயிர்நாடிபோன்ற கண்ணகியின் கோட்டம், அல்லது மங்கல

மடந்தை கோட்டம், இது வரையில் தோன்றியுள்ள வரலாறுகளில், ஆராய்ச்சிகளில் இடம் பெறுமல் இருக்கவியலாது. எனவே, இவ் விண்மையைத் 'தமிழகத்திற்கு அறிமுகப் படுத்தும் முதன்மை என் உழைப்பின் பயனாகும்.

ஓர் ஒட்டுரை :-

தமிழக வரலாற்றுக்குரிய மங்கலதேவிக்கோட்ட ஆராய்ச்சியினை, சென்ற 1964, அக்டோபரில் கரந்தைத் தமிழ்ச் சங்கக் கலைமகள் விழாவில் நிகழ்ந்த பாராட்டுரைக்குரியராகி வந்துற்ற, தமிழ்ப் பேரறிஞரும், 'பண்டைநாளைச் சேரமன்னர்' என்னும் நூலாசிரியரு மான திருவாளர் ஒளவை சு. துரைசாமி பிள்ளை அவர்களிடம் தெளிவாக எடுத்துரைத்தேன். அவர்கள், என்னுடைய முயற்சியைப் பாராட்டி புதுமையானதென்று மகிழ்ந்தார்கள் அடுத்து, பள்ளியகரம் தமிழகப்பேரறிஞர், திருவாளர் நீ. கந்தசாமி பிள்ளை அவர்களிடமும் மங்கலதேவிக் கோட்டம் பற்றிய என் ஆராய்ச்சியினையும் முடிபினை யும் தெரிவித்தேன். அவர்களும் மகிழ்ந்து ஊக்கப்படுத்தினர்கள். அதன்மேல் அவர்கள் அறிவுரைப்படியே கண்ணகியின் வரலாறு பற்றிய உண்மை தமிழக வரலாற்றில் இடம்பெற வேண்டுமென்ற பொதுநோக்குடன், மங்கலதேவிக்கோட்டம் பற்றிய என்னுடைய ஆராய்ச்சியினை, சுருக்கமாக ஆங்கிலத்தில் கட்டுரையாக்கி, "An Important place in the Silappadikaram identified" என்ற தலைப்பில், உரிய போட்டோக்களுடனும், கண்ணகி சென்ற நெறியைக் குறிக்கும் வரைபடத்துடனும் (Plan) 17—11—1964-ல் "The Hindu" என்னும் ஆங்கில நாளிதழுக்கு அனுப்பிவைத்தேன். அக்கட்டுரையும படங்களும் பதினறு நாட்களுக்குப் பின்னர் 4—12—64-ல் எனக்குத் திருப்பி அனுப்பப் பெற்றன. இந்நிலையில், மங்கலதேவி மலைக்கு, பழம்பொருளைக் காணும் முயற்சியுடையார் சிலர் விடா மழையையும் கருதாது சென்று வந்த செய்தி அறிந்தேன் எவ்வாருயினும், தமிழக வரலாற்றுண்மை தக்க வழியில் வெளிவர வேண்டுமென்பதே, இருபதாண்டுகளாக யான் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் கூறும் செய்திகளைப் பழம்பொருள் ஆராய்ச்சியின் வழியே கண்டு, தமிழக வரலாற்றை ஓரளவு நிறைவிக்க எண்ணி உழைத்து வரும் குறிக்கோளாகும். ஊதியம் கருதாது, கைப் பொருளைச் செலவிட்டு, உடலுழைப்பால் யான் கண்டுள்ள வரலாற் றுண்மைகளுள் சிறந்ததாகும் மங்கலதேவிக் கோட்ட ஆராய்ச்சியினை, வரலாற்றுத்துறைக்குரிய பெருமக்களும் சான்றோர்களும் அறவழியில் சீர்தூக்கி வரலாற்றில் இடம்பெறச் செய்யவேண்டு மென்பதே எனது விண்ணப்பமாகும். அதுவே, தமிழக வரலாற்றிற்குரிய நேர்மையுமாகும்.

(சென்ற மாத இதழின் தொடர்ச்சி)

மயக்கம்

பண்டித. சித. நாராயணசாமி,
அறுபத்துமூவர் மடம், திருவையாறு.

பழம் : பாற்று, கற்றீது, கஃறீது; தாட்டு; முட்டீது, முஃடீது என்னுமிடங்களில நின்றமெய்யும் வருமெய்யும மயங்குதற்குரியன வாக விகாரப்பட்டு மயங்கின. மரக்கொம்பு முதலிய இடங்களில் மகரம் வருங்ககர முதலியவற்றுடன் மயங்குந்தன்மை இன்மையால் கெடுதல் விகாரம் பெற்றது. பெறவே, மயங்காமையைப்பெற்றது. "உளங்காணும்" என்னும் அல்வழியில் (எழுவாய்த்தொடரில்) மகரம் ககரத்துடன் மயங்காமையால் ஙகரமாகத்திரிந்து மயங்கிற்று இவ்வாறு விகாரப்பட்டவழி மயங்குதலும் மயங்காமையு முண்டெனக் காண்க.

புது : பாற்று, தாட்டு என்னுமிடங்களில் நின்ற லகர ளகர ங்கள் வரும் றுவ்வீறு டுவ்வீறுகளிலுள்ள றகரடகரங்களுடன் மயங் காமையால் மயங்குதற்கேற்ற றகர டகரங்களாகத்திரிந்து மயங்கின. கற்றீது முட்டீது என்னுமிடங்களில் லகர ளகரங்களும் தகரமும் நின்று மயங்குதலும் வந்து மயங்குதலும் இன்மையால் லகரளகரங் கள் முறையே றகர டகரங்களாகவும் தகரம் அவற்றின்முன் றகர மாகவும் டகரமாகவும் திரிந்து மயங்கின. கஃறீது முஃடீது என்னும் இடங்களில் லகர ளகரங்கள் வருந்தகரத்துடன் மயங்காமையால் ஆய்தமாகத்திரிந்தன. ஆய்தம் தகரத்துடன் நின்று மயங்கும் என்பதும் தகரம் ஆய்தத்துடன் வந்து மயங்கும் என்பதும் 'குறிய தன் முன்னராய்தப் புள்ளி உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே" என ஆய்தம் பற்றிப் பேசுமிடத்துப் பெறப்படுதலான் இங்கே, தகரம் றகர டகரங்களாகத்திரியக் காரணம் என்னை ?

பழம் : எழுத்துக்கள் தொடர்மொழியின் கண்ணே தொடரும் போது காலத்தால் முற்பட்ட எழுத்து வரும் எழுத்துடன் மயங்காத தாக இருந்தால் அது மயங்குதற்குரிய எழுத்தாக மாறுதலும் கெடுதலுமுண்டு. மயங்குதற்குரிய எழுத்தாக மாறிநிற்குமிடத்து, அவ்வெழுத்தை வரும் எழுத்து முன்னின்ற எழுத்தாகக் கொள்ளு தலும் வேறு எழுத்தாகக் கொள்ளுதலும் உண்டு. கஃறீது முஃடீது என்னுமிடங்களில் லகர ளகரங்கள் ஆய்தமாகத்திரிய, வந்த தகரம் ஆய்தமாகக் கருதாமல் முன்னின்ற லகரனகரமாகவே கருதியதால் றகரடகரங்களாகத்திரிந்த இந்நிலையை. நச்சினுர்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள், "திரிந்ததன் றிரிபது" என்னும் நிலையாகக் கொள்வர் என்க. "மரக்கொம்பு" என்னுமிடத்து மகரம் ககரத் துடன் மயங்காமையால் கெடுதலடைய, ஆண்டு வந்த தகரம் அகரமாகியபிற ஈருகக்கொண்டது. கொண்டுமயங்குதற்குரிய தாயினும் வேற்றுமைப் பொருளைத்தருவதற்காகக் ககர ஒற்றுமிக்கு நிற்கப்புணர்ந்தது இங்கு அகர ஈருகக்கொண்ட நிலையை

"திரிந்ததன் றிரிபு பிறிது" என்று நிலையாகக்கருதுவர் அவ்வுரையாசிரியர்கள் என்க. என்றுரைத்துப் பழம்புலவர் கலந்துரையாடியது போதும் இனி ஒருகால்வருதும் நுமக்கிருக்குமையங்களையெல்லாம் எம்மால் இயன்ற மட்டும் நீக்குவேமெனக் எழுந்து செல்லமுயலும் போது. ஐய!' நும்மாற்பல ஐயங்களைப் போக்கினேன். இன்னுஞ் சிறிது பொழுதிருந்தால் இன்னுஞ்சில ஐயங்களைப் போக்கிக்கொள்வேன் என, வணக்கத்துடன் தெரிவிக்கவும் ஒருப்பட்டமர்ந்தனர்.

புது: ஐய! "ஙம்முன் கவ்வாம் வம்முன்யவ்வே" "டறலள என்னும் புள்ளி முன்னர்க், கசபவென்னுமூவெழுத்துரிய" என்பன முதலியவற்றிற்கு நின்று மயங்கும் ஙகர முதலியவற்றோடு ககர முதலியனவந்து மயங்கும் எனப் பொருள் கொள்ளாது ங, முன் கவ்வாம் வ, முன்யவ்வாம் என்பது போலவும டறலள என்னும் புள்ளி, முன்னர்க் கசப வென்னு மூவெழுத்துரிய என்பதுபோலவும் வகுத்து ஙகரம் தனக்கு முன்னர் வரும ககரத்துடன் மயங்கும்: வகரம் தனக்கு முன்னர் வரும் யகரத்துடன் மயங்கும் என்பது போலவும டகர றகர லகர ளகர மெனனும் புள்ளி (மெய்) எழுத்துக்கள் தமக்கு முன்னே வருகின்ற ககர சகர பகரங்களென்னும் மூவெழுத்துக்களுடனும மயங்குதற்குரியன என உரை கூறினால் என்னை? இங்ஙனங்கூறினால் ஒரு குற்றமும் வாராதன்றோ?

பழம்: இவ்வாறு நாம் வலிந்து பொருள் கொள்ளின் வருவன ஒத்து மயங்குமென்பது பெறப்படாமற் போய்விடும். இவ்வாறு வலிந்து பொருள் கொள்வதற்கு நன்னூலில், "யரழவொற்றின முன் கசதப ஙஞநம" "ரழத்தனிக்குறிலணையா" லளமெய் திரிந்தனணமுன் மகாரம்நைந் தீரொற்றாம் செய்யுளுள்ளே" என்னு நூற்பாக்களும்: தொல்காப்பியத்தில் "யரழவென்னும் புள்ளிமுன்னர், முதலாகெழுத்து ஙகரமொடு தோன்றும்" "மெய்ந்நிலைச்சுட்டின் எல்லாவெழுத்தும், தம்முற்றும் வரூஉம் ரழவலங்கடையே". என்னு நூற்பாககளும இடந்தரா. நன்னூலில் "ஙம்முன் கவ்வாம்" என்பது முதலியனவாக மயக்கவதிகாரத்தில் வரும் நூற்பாக்களும் தொல்காப்பியத்தில், "டறலளவென்னும் புள்ளி முன்னர்" என்பது முதலியனவாக மயக்கவதிகாரத்தில் வரு நூற்பாக்களும் வந்து மயங்குமெழுத்துக்களையே வகுத்துக்கூறின. நின்று மயங்கும் எழுத்துக்களைப் பற்றிப் பேசவில்லை என்பது, "யரழவொற்றின் முன்" என்பது முதலியவற்றாற் பெறப்பட நன்னூலார் கூறியதேயன்றித் தொல்காப்பியர். "யரழவென்னு மூன்றுமொற்ற" என்பதனாலும் பிறவற்றாலும் கசதபஙஞநம முதலியன வந்து மயங்குவன என்பது பெறப்படக் கூறினமையாலும் அந்நூற்பாக்களுக்குரையிட்ட நச்சினார்க்கினியர், "டறலளவென்னும்" என்பது முதலிய நூற்பாக்களில் "வந்து மயங்கும்" என விளக்கமாக உரை உரைத்தமையாலும் நன்கு புலப்படுதலின் நீவிர் கூறியபடி உரை இடல் பொருந்தாதென்க

புது: நன்னூலில், "கசதப" மெய்கள் ஒழித்த பதினன்கு (ஙஞநம-டறணன யரலவழள) மெய்களும் நின்று பிற மெய்களுடன் கூடும் கூட்டம் வேற்று நிலை மெய்ம் மயக்கம் எனவும் 'ரழ' ஒழித்த பிற மெய்கள் (கசடதபறஙஞணநமனயவலள என்னும் பதினறு மெய்கள்) நின்று தம்மெய்களுடன் மயங்கும் மயக்கம் உடனிலை மயக்கம் எனவும் விளங்கக்கூறி "ஙம்முன்கவ்வாம்" என்பது முதலியவற்ருல் நின்று மயங்கும் பதினன்கு மெய்களும் பிறவெனப் பட்ட எல்லா மெய்களுடனும் மயங்கா தம்மை நோக்கி வரும் இன்னின்னவற்ரோடு தான் மயங்குமெனவும் விளங்கக்கூறினர். தொல் காப்பியர் அவ்வாறு கூறினரல்லரே ஏன்?

பழம்: தொல்காப்பியர் நுண்புலமுடையாரை நோக்கிக் கூறுதலை மேற்கொண்டமையால் அவையெல்லாம் ஆய்ந்துணரக் கூறினர் என்க.

புது: எவ்வாறு கூறினர்?

பழம்: "அமமூவாறும் வழங்கியல் மருங்கின்
மெய்ம்மயக்குடனிலை தெரியுங்காலை"

என்பதனல் மெய்கள் பதினெட்டும் மொழிக்கண் மயங்கி நிற்கு மென்பதும் அவை வேற்றுநிலை மெய்ம்மயக்கமெனவும் உடனிலை மெய்ம்மயக்கம் எனவும் இருவகைப்படும் என்பதும் வெளிப்படக் கூறினர்.

"டறலள வென்னும் புள்ளி முன்னர்க்
கசப என்னு மூவெழுத்துரிய"

என்பது முதலிய நூற்பாக்களால் பிறவாக நின்று மயங்குவன இவை என்பதும் நின்று மயங்குவனவோடு பிறவெனப்பட்டவெல்லாம் வந்து மயங்கா. வந்து மயங்குவன இவைதாம் என்பதும் இவ்வாறு பிறவற்ரோடு மயங்குதற்குரிய ஙகர முதலிய பதினன்கும் கசதபஙஞ நமயவ ஆகிய பிற பத்துமெய்களுடன் மயங்குதல் வேற்றுநிலை மெய் மயக்கமாகும் என்பதும் வல்லின வெழுத்துக்களுள் டற என்னும் மெய்களே பிறவற்றுடன் மயங்குமெனக்கொள்ள, டறலள" எனத் தொடங்கிக்கூறியதால் கசதபக்கள் பிறமெய்களுடன் மயங்கா என் பதும் பெறப்படக்கூறினர்.

"மெய்ந்நிலைச்சுட்டின் எல்லாவெழுத்துந்
தம்முற்றும் வரூஉம ரழவலங்கடையே"

என்பதனல் 'ரழ' அல்லாத ககர முதலிய பதினறு மெய்களும் நின்று வருந்தம்முடன் மயங்கும் அம்மயக்கமே உடனிலைமெய்ம்மயக்கம் ஆகும் என அதனை விளக்கினர்.

இனி, "யரழ வென்னும் புள்ளி முன்னர்க் கசதபஙஞநம" என்பதனால் மெய்கள் ஈரொற்றாக நின்று மயங்கும் எனக்கூறுதலால் நூன்மரபில், "டறலள என்பது முதலிய நூற்பாக்களால் டறலளக்கள் முதலிய மெய்கள் தனிமெய்களோடன்றி உயிர்களுடன் கூடிய மெய்களோடுதான் மயங்குமெனக்கூறினரென்பது பெறப்படுகிறது. இதனால், 'அம்மூவாறும்" என்னு நூற்பாவால் தனிமெய்யாக நின்று மயங்கும் பதினெண்மெய்களையே வேற்று நிலை உடனிலை மயக்கமெனப்படுத்துக் கூறினர் என்பதும் புலப்படுகிறது. இனி, மெய்களுடன் உயிர்மயங்குதலும் உயிர்களுடன் மெய்மயங்குதலும் வேற்றுநிலை உடனிலை என்பனபோல ஒருவரையறையில்லையாதலின் அவைகளைப்பற்றி ஒன்றும் கூறாதொழிந்தனர். என்றாலும் மொழிமுதல் எழுத்துக்கள் ஈருகுமெழுத்துக்கள் பற்றிப் பேசும் போது மெய்களுயிர்களுடன் மயங்குமென்பதும் உயிர்களுடன் மெய்கள் மயங்குமென்பதும் "ஆவோடல்லது யகர முதலாது" "உச்சகாரமொன்றென மொழிப" என்பது முதலியவற்றாலும் *பிறவற்றாலும் உயிருடன் மெய்யும் மெய்யுடனுயிரும் மயங்குதற்கும் சிலவரையறையுண்டு: மொழியாமிடத்தென்பதும் உய்த்துணருமாறுங் கூறினர் காண்க.

புது: "அவற்றுள், ரகாரழகாரங்குற்றொற்றாகா" என்பதனால், தனிக்குறிலாகிய உயிர்கள் ரகரழகர மெய்களுடன் மயங்கா. அவைகளும் தனிக்குறிலுடன் வந்து மயங்கா எனக்கூறியதனால் உயிர்கள் மெய்களுடன் மயங்குதலையும் மெய்களும் உயிர்களுடன் மயங்குதலையும் குறிப்பித்தனர் என்னலாமோ?

பழம்: இந்நூற்பாவிற்கு ரகரழகரங்கள் தனிக்குறிலின் கீழ் வந்து மயங்கா என்ற அளவில் உரை கூறி மயக்குதலால் நீவிர் இவ்வினாவைவினாவினீர் இந்நூற்பா, வெறிதே "ரகாரழகாரங் குற்றொற்றாகா" எனவராது "அவற்றுள், ரகாரழகாரங்குற்றொற்றாகா எனவருதலால் மேலே நிற்கும் நூற்பாவை அவாவிக் கொண்டு நிற்பதாகின்றது. மேலே நிற்கு நூற்பா, "யரழ வென்னு மூன்று மொற்றக், கசதபஙஞநம ஈரொற்றாகும்" என்பதாகும். அது நூன்மரபில் முதலில் எழுந்த யரழ மெய்கள் தாம் "புள்ளி ஈற்றுமுன் உயிர்தனித்தியலாது" என்பது முதலியவற்றை "பிறவாற்றானும்" எனக்குறித்தனன் என்க.

அவாவிநிற்கும் கசதபஙஞநம வந்தால் அவற்றுடன் மயங்குமென்பதையும் தனி மெய்யும உயிரோடு கூடிய மெய்யுமாக மயங்குமென்பதையும் கூறி, கூறியவாறே அவை தனிமெய்யும் உயிரோடு கூடிய மெய்யுமாக மயங்குதலேயன்றி ஈரொற்றுடனிலையாகவுமயங்குமென்பதையுமறிவித்தற்கு நூன்மரபினொழிபாக மொழி மரபில் எழுந்த நூற்பாவாகும். அவற்றுள் ரகாரழகாரங்குற்றொற்றாகா" என்பது அந்நூற்பாவிற்கடுத்து நிற்றலால் 'அவற்றுள்' என்பதற்குக் 'கசதபஙஞநம' என்பனவற்றை அவாவி நிற்கும் யரழக்களு

* "புள்ளி ஈற்றுமுன் உயிர் தனித்தியலாது" என்பது முதலியவற்றை "பிறவாற்றானும்" எனக் குறித்தனன் என்க

என உரை கோடலே பொருத்தமாகும். "யரழவென்னும் புள்ளி" என்பதால் அவை யாதானுமோருயிர்ப்பின் நிற்குமென்பதும், உயிர்களும் மெய்களும்கூடி மொழியாதற்கண் பின்வருமெய்கள் தனிக் குறிலை யடுத்தும் தனி நெடிலையடுத்தும குறிலிணை குறினெடிலிணை முதலியவற்றை யடுத்தும் நிகழுமாதலின் இவையும் (இவ் யரழக்களும்) அவ்வாறே பின்வரும்போது நிற்குமென்பதும் வெளிப்படும். இவ்வாறு வெளிப்படுமாறு கூறியதனால் யகரமெய்யே யன்றி ரகாரழகாரங்களும், தனி நெடில்குறிலிணை குறினெடிலிணை முதலியவற்றிற்குப் பின்னின்று, வருங் கசதபஙஞநம என்பவற்றுடன் மயங்குதல் போலத் தனிக்குறிலின் பின்னின்றும் வரும் கசதப ஙஞநமக்களுடன் மயங்குமெனவுங் கொள்ளநேரிடும். அவ்வாறு கொள்ளாமைக்காக அவை குற்றொற்றாக வராமையால் அவை குற்றொற்றாக நின்று மயங்குதலில்லையெனக் கூறலின் றியமையாததாயிற்று. ஆனதால் 'யரழ வென்னும் புள்ளி" என்பதன்பின் "அவற்றுள் ரகாரழகாரங் குற்றொற்றாகா" எனக் கூறினாரன்றி நீவிர் கூறியபடி தனிக் குறிலாயவுயிர்கள் ரகாரழகார மெய்களுடன் மயங்கா ரகாரழகார மெய்களும் தனிக்குறிலுடன் வந்து மயங்கா என்பதை அந்நூற் பாவால் (அவற்றுள் ரகாரழகார என்னுநூற்பாவால்) கூறவந்தாரில்லை. அதனால் உயிர்மெய்கள் மாறிமயங்கு மென்பதைக் குறிப்பித்தன ரென்பதுமில்லை உயிர்மெய்கள் தம முன்மாறி மயங்குதல், உயிர் மெய்களைப் பலபடியாககூறுமிடங்களில் தானாகவே விளங்கி நிற்றலால் "அவற்றுள் ரகாரழகாரம்" என்பதனாலேயே குறிப்பித் தனரென்பதும் பொருந்தாது. அந் நூற்பாவால் தனிக் குறில்வரும் ரகாரழகாரங்களுடன் மயங்கா ரகாரழகாரங்களும தனிக் குறிலுடன் வந்துமயங்கா என்பது தானாகவே பெறப்படுவதன்றி அது நோக்கியே அந் நூற்பா வந்ததென்பதில்லை யெனவுங் காண்க.

இனி ரகாரழகாரங்கள் குற்றொற்றாக நின்றுவருங் கசதபஙஞ நமக்களுடன் மயங்காததுபோல யகரமெய்யும குறிலிணை யொற்றாக நின்றுவருங் கசதபஙஞநமக்களுடன் மயங்காமையால் அதனையும் "யகாரம குறலிணை யொற்றாகாது" என விலக்குதல் வேண்டாமோ என்றுமொரு கேள்வி யெழலாம, அதற்குக் குறிலிணையும் நெடிலாகவே கருதப்படுதலால் (மாத்திரை வகையாற் கருதப்படுதலால்) யரழமெய் முதலியன நெடில் குறிலிணை குறினெடிலிணைகளுக்குப் பின்வரினும் நெடிற்குப் பின் வந்தனவாகவே கருதப்படும். அவ்வாறு கருதப்படுதலால குறிப்பிடும யரழக்களும் நெடிற்கீழ் நின்று மயங்குதலும குறிலின்கீழ் நின்று மயங்குதலுமென்னும் இரு நிலையுங் கொள்வனவாகக் கருதப்படும். அவ்விரு நிலையுங் கொள்வது யகரமெய்யன்றி ரகாரழகார மெய்களாகா அவை நெடிலின்கீழ் மட்டும் நின்று மயங்குவனவாகவே கருதப்படும். ஆனதால் அவற்றைக் குற்றொற்றாகா என விளக்கினர். யகரம் நெடிலின்கீழும் நெடிலாகக் கருதப்படும் யாதானுமொன்றின்கீழும் வந்துநிற்றலால் அதனைக் குறிலிணைக்குக்கீழ் வராது என விலக்கவேண்டுவதில்லை யாகலின் விலக்காராயினர். இதனை விளக்கவே "குறுமையு நெடு

மையுமளவிற் கோடலிற்றொடர் மொழியெல்லா நெட்டெழுத் தியல" என்னுநூற்பாவை யடுத்து நிற்க யாத்தன ரென்க. இந் நூற்பாவில் தொடர்மொழி என்பது குறிலிணையேற்றும் குறிநெடி லொன்றாய் இணைந்து நிற்குமொழிகளை யென்க.

புது : ஐய! நன்று! நன்று! நும் மருமந்த ஆய்வுரை கங்கள் என்பது முதலியவற்றில் கால்த்தால் முன்னின்ற ஙகர முதலியனவே முன்மயங்குவனவாக நிற்குமென்றீரே அதற்குமுன் சொன்ன முன் னிலை (காரணம்) அன்றி வேறு முன்னிலையுமுண்டோ ?

பழம் : உண்டு. உரைப்பல். கேண்மதி! சாத்தன்வந்தான் என்னும் தொடருள் முடிவது யாது ? முடிப்பது யாது ?

புது : முடிவது சாத்தன் என்பதாகும். முடிப்பது வந்தான் என்பதாகும்.

பழம் : முடிவதுதானே தன்பொருளை விளக்குவதற்கு முடிப் பதை நாடி அம் முடிப்பதனோடு முன் சேருகின்றது. அது போல 'கங்கன்' என்பதில் ஙகரமே முன்னெழுந்ததாகலின் தன் னைப் பயன்படுத்தவேண்டி தான் நாடிக்கொண்டிருக்குங் ககரம்வர அதனோடு முன் மயங்குவதாகும் இங் ஙகரம்போலவே முன்னெழுந் தன வெல்லாம் முன்மயங்குமெனக் காண்க.

புது : ஐய! உயிர்மெய் வருமுயிர் மெய்யுடனும் மயங்குதலும் அது மெய்யுடன் மயங்குதலும் "அம்மூவாறும்" என்ற நூற்பாவிற் கூறியதாகவும் நச்சினார்க்கினியர் கூறுகின்றனர். அது பொருந்து வதாமா ?

பழம : இவ்வாறு அப்பேருரை யாசிரியர் கூறியதை நன்னூல் விருத்தியில் மறுத்துள்ளார் அவ்வுரையாசிரியர். அதனை நீவிருமறி வீர் என்றாலும் விளங்க யானும் கூறுவல். கேண்மின்! ஆசிரியர் தொல்காப்பியர், "மெய்யின் வழியிதுயிர் தோன்றுநிலையே" எனவும் "உயிர்மெய்யீறு முயிரீறியற்றே" எனவும் "உயிரிறு சொல்முன் உயிர்வருவழியும், உயிரிறு சொலமுன் மெய்வரு வழியும், மெய்யிறு சொல்முன் உயர்வருவழியும், மெய்யிறு சொலமுன் மெய்வருவழியும்" எனவும் "மெய்யினியக்கம் அம்ரமொடு சிவணும" மெய்யீறெலலாம் புள்ளியொடு நிலை யல்" எனவும் கூறிய முறையினால் அவர், உயர்மெய்யை, மாத்திரை வகையினாலே ஓரெழுத்தாகக் கொண்டாலும் முன்னொலியை நோக்க மெய்யாகவு பின்னொலியை நோக்க உயிராகவும் அது நிகழ்தல் கொண்டு இரண்டெழுத்தாகவே கருதினரென்பது புலப்படுதலா னும் "அம்மூவாறும்" என்பது தனி மெய்கள் நின்று மயங்கு தலையே கூறுகின்றதென்பது பின்வரும் "டறலள" என்பது முதலிய நூற்பாக்களாற் புலப்படுதலானும் மாதவச் சிவஞானசுவாமி களும் இக்கருத்தை ஒப்பினார்களென்பது தொல்காப்பிய சூத்திர விருத்தியுரையாற் புலப்படுத்தானும் நச்சினார்க்கினியருரை

பொருந்தாதென்க. அன்றியும் அப்பேருரையாசிரியரே, (நச்சினார்க்கினியரே.) "உயிர்மெய்யீறு முயிரீறியற்றே" என்ற நூற்பாவிற்குரையெழுதுங்கால், "மெய்யே உயிரென்றுயீரியல்" (எழுத் கஙரு.) என்றவுயிர்க்கணிகழ்வ தோரையமகற்றியது; உயிர் மெய்யென்னும் ஓர் ஈறு உண்டேனும் அது புணர்க்கப்படாது. அதுவும் உயிரீறாயே அடங்குமென்றலின் எனவும் "உம்மையால் இடைநின்ற உயிர் மெய்யும் உயிரீற்றினியல்பையுடைத்து" எனவும் எழுதி இருத்தலினாலும், அக்கொள்கை பொருந்தாதென்பதை அறிக

புது: நாவலர் பாவலர் பேருரையாசிரியர் குலபதி என்றெல்லாப் பெயரும் இட்டழைக்க எழுந்தருளியவரும் சிவஞானச் செல்வருமாகிய மாதவச் சிவஞான சுவாமிகள், "மயங்கா மரபினெழுத்து முறைகாட்டி" என்பதற்கு உரை உரைக்குமிடத்து, "இயற்றமிழு மிசைத்தமிழும் நாடகத் தமிழும் முன்னூலுட் போல் விரவாத தன்மையானே இயற்றமிழை வேறுபிரித்து முறையானே யுலகிற்கறிவித்து" எனச் பெருளுரைத்துப் பின்னர், "மயங்கா மரபினெழுத்து முறைகாட்டி" என்புழி எழுத்து என்பது ஆயற்றமிழை அஃது "எண்ணென்பவேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்கண் ணென்ப வாழுமுயிர்க்கு" "எழுத்தறியத் தீருமிழிதகைமை" என்பவற்றானுமுணர்க. எழுத்து இயற்றமிழ் சத்தம் என்பன ஒரு பொருட் கிளவி" எனக்கூறியிருத்தலால் தொல்காப்பியம் முதலியவற்றை இயனூல் எனவும் வழங்கலாம் என்பதும் பண்டையோர் அவ்வாறு வழங்கினர் என்பதும் பெறப்படுமெனவே கருதுகின்றேன் நுங்கருத்தென்னை?

பழம்: தொல்காப்பியம் வழக்குவடிவும் செய்யுள் வடிவுமாகவுள்ள இயற்றமிழின் இயல்புகளை உரைத்தலால் இயற்றமிழ் எனப்படினும் பொதுவாக நிற்பதன்றிச் சிறப்பாக நின்று தொல்காப்பியம் போன்ற நூல்களை உணர்த்தாமையாலன்றே அந்நூல்களிலுள்ள புலனை எழுத்து எனவும் அந்நூல்களை எழுத்து நூல்களெனவும் சிறப்பாக வழங்குதற்கும் அது அவற்றைச் சிறப்பாக உணர்த்துமென்பதற்குமன்றே "மயங்கா மரபின் எழுத்து எனவும் எண்ணென்பவேனையெழுத்தென்ப" எனவும் "எழுத்தறியத் தீருமிழிதகைமை எனவும் பண்டையோர் கூறுவாராயினர். எழுத்தென்பது சிறப்பாக எழுத்தினியல்பை (எழுத்துச் சொற்பொருளினியல்பை) இருமடியாகு பெயராக நின்று உணர்த்தி அதனை உணர்த்தும் நூலையும் மும்மடியாகு பெயராக நின்று உணர்த்துமென்பதை "எழுத்தறியார் கல்விப்பெருக்க" மனைத்தும் எழுத்தறிவார்காணினிலையாம் "ஏரணங்காணென்ப ரெண்ணரெழுத்தென்பரின் புலவோர்" என்பனபோன்ற சான்றோருரைகளாற் புலனாகும் என்க. அங்குக் கல்விப் பெருக்கம் என்பது தொகைநிலை தொடர்நிலைச் செய்யுட்கல்வியும் பிற கல்வியுமடங்கவே நின்றதென்வும் "எழுத்தென்பர்" என்பதனால் திருக்கோவையார் உண்மையில் எழுத்துநூல் அன்று எழுத்துநூல் வேறெனக் குறித்த

பரிபாடலின் இலக்கியச் சுவை

(புலவர், தி. நா. அறிவுஒளி)

•••○○○•••

ஒருவன் ஆறு அடி உயரம் வளர்கிறான்; இன்னொருவன் ஐந்தடி உயரம் வளர்கிறான்; வேறொருவன் நான்கு அடி மட்டுமே வளர்கிறான். ஒருவன் உயரம் மற்றவனுக்கு வாய்ப்பதில்லை. நாலடியான், 'ஐந்தடியானாக இல்லையே!' என ஏங்குவான். ஐந்தடியான், 'ஆறடியானாக ஆகாமலிருக்கிறேனே!' என வாடுவான், ஆறடியானோ, அளவுக்கு மீறி ஏணியானேனே! நெட்டைப் பனைமரமெனக் குட்டை நண்பர்கள் கூப்பிடும் உயரம் ஏன் அமைந்ததோ? ஐந்தடியோ, ஐந்தரை அடியோ அமையலாகாதா?' என அலமருவான்.

உடல் அளவு ஆளுக்கு ஆள் அளவிடப்பட்டமைவதுபோலவே, உள்ளந்தளவும் ஆளுக்கு ஆள் அளவிடப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி நாட்டுக்கு நாடுங்கூட அஃது தனித்தனியளவோடு அமைந்துள்ளது.

சான்றோன் உள்ள நிலை, பண்பாடு, அறிவு, வாழ்வு நிலை எளிய மாந்தனுக்கு அமைவதில்லை. எளியவன் நிலை தீயவனுக்கோ, சான்றோனுக்கோ அமைவதில்லை தீயவன் அகநிலை எளியோனுக்கோ, சான்றோனுக்கோ அமைவதில்லை.

தமிழிலக்கியத்தில் நெடும்பாடல்களாக அமைந்தவை பத்துப் பாட்டும்; பரிபாடலுமே ஆம் இவை அடியால் மட்டும் அன்றி அனைத்துப் பண்பு, தகுதி, சுவை, அறிவு, உணர்வு, நயமாயவற்

---

* 24–5–64 – திண்டிவனத்தில் ஆற்றிய சொற்பொழிவுச் சுருக்கம்.

(392-ம் பக்கத் தொடர்ச்சி)

தெனவுங் காண்க. ஆகையால், இயல், இயற்றமிழ் என்பதைவிட "எழுத்து" என்பதே தொல்காப்பியம் முதலிய நூல்களைப் பொதுவாக வழங்குதற்குச் சிறந்த பெயராகக்கொண்டன ரென்பது சாலுமென்க.

மேலே புதுப்புலவர் ஐய நீவிர் உரைத்தவை யெல்லாமுளங் கொண்டனன். 'இக்காலத்தாரென் பயனினோர்தோ விசையார் தாமுமிசையார் பூமியில்'' (இலக்கணக்கொத்து) என இகழ்தற்கிலக்காகாது நுண்ணிய கருத்துக்களை யெடுத்துரைத்தமை குறித்து மிக மகிழ்கின்றனன். 'வாழ்க நீவிர் வாழ்க நுர்நுண்புலம்' என வாழ்த்திப் பின் சென்று வழியனுப்பப் பழம்புலவர் வழிப்படர்ந்தனர். புதுப்புலவருந் தம்மிருப்பிடம் புக்கனர்.

ருலும் நெடியவையேயாம். அதிலும் பரிபாடல்களின் பண்பார் நெடுமை நெஞ்சு நெடிது போற்றற்குரியது!

பரிபாடல் என்பது பரிந்து பாடப்பட்டது எனப் பொருள்படும். அகமுருகி எழும் அன்பால் தோன்றிய இன்பப்பாடல் பரிபாடலாம்.

நெஞ்சை நெகிழ்ந்துருக்கும் உருக்கமும் உணர்வுப் பெருக்கமும் நல்கும் பாட்டுத்தான் நிலை பேறுடைய நல்லின்பம் அருளும் பாட்டு; அதுவே வாழ்வின் ஆக்கத்துக்கு உதவும் பாட்டு! இப் பாக்கள் நண்பன் போலவும், தோழி போலவும் உதவும் பாட்டாகும். நம் பரிபாடல் இத்தகுமாண்பு கெழுமியதாகும்.

பரிபாடலைப் புலவர்கள் 'ஓங்கு பரிபாடல்' எனப் போற்றினர். 'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதன்' எனவரும் பாடலில் 'ஓங்கு' என்ற சொல் ஒப்புயர்வற்ற மேன்மையைக் குறிப்பதுபோல இங்கு தனிஉயர்வு காட்டுகிறது

பரிபாடல் என்பது ஒருவகைப் 'பா' வாகும், 'குறள்' என்பது போல இதற்கும் பெயர் அமைந்தது. இதைப் பரிபாட்டு என்றும் கூறுவர். எண்வகை வனப்பினுள் இப் பரிபாடலை 'இழை' என்ற வகையில் அடக்குகிறார் பேராசிரியர், தம் தொல்காப்பியச் செய்யு ளியல் உரையில். இது இசைப் பாடலாகப் பண்டைக் காலத்தில் வழங்கியது, கலியும் பரிபாடலும் போலும் இசைப் பாட்டாகிய செந்துறை (தொல்-செய்-நூ ; 242, பேர்) என்ற உரைப் பகுதி யால் கலிப்பாவும், பரிபாடலும் இசைப் பாடல்கள் என்பதை அறியலாம்.

தற்போது பரிபாடல் நூலில் இருபத்திரண்டு பாக்கள் முழுமை யாகக் கிடைத்துள்ளன. பொருள் புலப்படாப் பாடல்கள் சிலவும் பரிபாடலைச் சார்ந்தன எனக் கருதப்படுகின்றன.

இசைத்தமிழ் இலக்கியங்களுள் மிகப் பழங்காலத்திய நூல்கள் கலித்தொகையும் பரிபாடலுமே யாகும். கலித்தொகை அளவால் சிறிய இசைப் பாக்களைக்கொண்ட நூல். பரிபாடல் நீண்ட இசைப் பாக்களாலான நூல்.

பரிபாடலானது கலியுறுப்புக்களை ஒரோவழிப்பெற்றும்,வெண்டளை விரவப் பெற்றும் அறம், பொருள், காமம் என்ற முப்பொருளில் காமம் பெரிதும் அமையப் பாடப்பெறும் (ஒரளவு வாழ்த்தியலாகவும் அமையும்) என்றும் அறிகிறோம். பரிபாடல்களை ஆசிரியப் பாவாகக் கருதுபவரும் உளர்.

பரிபாடலை இயற்றியவர்கள் பதின்மூன்று புலவர் பெருமக்களாவர்.

1. ஆசிரியன் நல்லந்துவனார் மூன்று பாடல்களை (6, 11, 20) வையை பற்றியும் ஒரு பாவால் முருகனையும் (8) பாடியுள்ளார்.

2. இளம் பெருவழுதியார் திருமாலைப் பற்றி ஒரு பா (15) பாடியுள்ளார். இவர் பாண்டியமன்னராக விளங்கியமையோடு புலவர்பெருந்தகையாகவும் சிறந்திருந்தமை எண்ணத்தகுந்தது. இவர் புறநானூற்றில் 'உண்டாலம்ம' எனத்துவங்கும் அறவுரைப் பாடலை அழகாக இயற்றியவர். இவர் கடலில் மாய்ந்தமையால் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியார் எனக்குறிக்கப்பெற்றார்.

3. கடுவன் இளவெயினனார் திருமாலைக் குறித்து இரு பாக்களும் (3, 4) முருகனைப்பற்றி ஒரு பாவும் (5) பாடியுள்ளார்

4. கரும்பிள்ளைப் பூதனார் வையையைப்பற்றி ஒருபாடல் (10) பாடியுள்ளார்.

5. கீரந்தையார் திருமாலைப்பற்றி ஒருபாடல் (2) இயற்றியுள்ளார்.

6. குன்றம் பூதனார் முருகனைப்பற்றி இரண்டுபாடல்கள் (9, 18) யாத்துள்ளார்,

7. கேசவனார் முருகனைப்பற்றி (14) ஒரு பாடல் ஆக்கியுள்ளார்; இசையும் வகுத்துள்ளார்

8. நப்பண்ணனார் முருகனைப் பற்றி ஒருபாடல் (19) பாடியுள்ளார்.

9. நல்லச்சுதனார் முருகனைக் குறித்து ஒரு பாடல் (21) இயற்றியிருக்கிறார். அது மட்டுமின்றி இவர் 'கரையே' கைவண் தோன்ற' (15) தேம்படுமலர்குழை பூந்துகில் (17) போரெதிர்ந் தேற்றார் மதுகை (18) கடல் குறைபடுத்த நீர் (20) என்ற துவக்க முடைய பாடல்களுக்கு இசைவகுத்துள்ளார். நிலவரையமுவத்தான (19) என்றுதுவங்கும் பாவுக்கு மருத்துவன் நல்லச்சுதனார் இசை வகுத்துள்ளார். அவரும் இவரும் ஒருவரோ என்ற ஐயம் உண்டாகிறது,

10. நல்லழுசியார் வையைபற்றி ஒருபாடலும் (16) செவ்வேள் பற்றி (17) ஒரு பாவும் யாத்துள்ளார்.

11. நல்லெழுனியார் திருமாலைப்பற்றி ஒருபாடல் (13) இயற்றியுள்ளார்,

12. நல்வழுதியார் வையை குறித்து ஒரு பாடல் (12) பாடியுள்ளார். இவரும் பாண்டிய மன்னராயிருந்து புலமையிற்சிறந்திருந்தமை அறியற்பாலதாம்.

13. மையோடக்கோவனார் வையைபற்றிப் பாடலொன்றை (7) இசைத்துள்ளார்

இந்நூற்பாடல்களுக்கு இசையமைத்த இசையமைப்பாளர் களைக்குறித்தும் நாம் அறியமுடிகிறது. இந்நூலின் தனிச்சிறப்புக் களுள் இதுவும் ஒன்றும். இயற்றமிழ்ப் புலவர் ஒருவராகவும்,

இசைத்தமிழ்ப் புலவர் இன்னொருவராகவும் அமைந்த சிறப்பு சங்க காலத்தேயே அமைந்திருந்தமை இதனால் தெளிவாகிறது.

1. கண்ணகனார் 21-ஆம் பாடலுக்கு இசையமைத்தவராவார். காந்தாரம் என்ற பண்ணை 'ஊர்ந்ததை எரிபுரை யோடை யிடை யிமைக்குஞ் சென்னி' என்ற பாடற்கு அமைத்திருக்கிறார். இவர் புறநானூறு 218-ஆம் செய்யுளை இயற்றியுள்ளார். கோப்பெருஞ் சோழனோடு பிசிராந்தையாரும் வடக்கிருந்தமையைக் கண்ட கண்ணகனார் 'பொன்னுந்துகிரும்' எனத்துவங்கும் பாடலைப் பாடிச் சான்றோர், சான்றோர் பக்கமே சார்வர் என்றும் சால் பில்லாதார், சால் பிலாரையே சேர்ப என்றும் அறிவுறுத்தியருளினார். தமிழிலக்கியத்தில் புகழ்பெற்ற பாக்களில் இப்பாடலும் ஒன்றும். இவர் நற்றிணையில் 79-ஆம் பாலைத்திணையைப்பாடியுள்ளார் சுவை மிக்க காதற்பாட்டதுவாம்! இதனால் கண்ணகனார் இயல், இசைத் தமிழ்களில் தனிச்சிரியபுலவர் பெருந்தகையாராகத் திகழ்ந்தவர் என அறியலாம்.

2. கண்ணனாகனார் 5-ஆம் பரிபாடலுக்கு இசைவகுத்தவ ராவார்

3. கேசவனார் 14-ஆம் பரிபாடலுக்கு இசையமைத்தார். இவர் இயற்றமிழ்ப்புலமையும் சான்றவர்.

4. நன்நாகனார் 16, 17, 18, 20 ஆம்பாக்களுக்கு பண்ணமைத் தார்.

5. நல்லச்சுதனார் 16, 17, 18, 20-ஆம் பாக்களுக்கு இசை யமைத்தார். இவரும் இயற்றமிழ்ப் புலமை சான்றவர்.

6. நன்னாகனார் 2-ஆம் பரிபாடலுக்குப் பண்ணமைத்தார்.

7. நாகனார் 11-ஆம் பரிபாடலுக்கு இசைவகுத்தார்.

8. பித்தாமத்தர் 7-ஆம் பாவுக்குப் பண்ணமைத்தார்.

9. பெட்டனாகனார் 3, 4-ஆம் பாக்களுக்கு இசையமைத்தார்.

10. மருத்துவன் நல்லச்சுதனார் 6, 8, 9, 10, 15, 19 ஆம் பாக்களுக்குப் பண்ணமைத்துள்ளார். இவர் மருத்துவத்தொழி லிலும் வல்லுநர் என்பது அவர் சிறப்படைபெயராலும் அறியலாம்.

இவ்விசை மேதைகள் பற்றியும், இயற்புலவர்கள் பற்றியும் தெள்ளியவரலாறு அறியமுடியாத அவலநிலை நினைதொறும் நம் நெஞ்சைவாட்டி வருத்துகிறது. இவர்கள் வாழ்க்கைகுறிப்பேதும் கிட்டவில்லையே! என நாம் ஏங்குகிறோம். இவ்வினிய தமிழிசை இலக்கியத்துக்குப் பரிமேலழகியார் அரியதொரு உரை எழுதி யுள்ளார். இவ்வுரை இவ்விலக்கியத்தை நன்குணரப்பெரிதும் பயன்படுகிறது. ஆயின், பரிமேலழகர் உரையே சீரிய மெய்யுரை எனக்கொள்ளவேண்டுவதில்லை. சில இடங்களில் பரிமேலழகர்

கொண்ட கருத்து, பொருள் உண்மைதானே? என்ற ஐயம் எனக்கு மிகுதியாக எழுகிறது. ஆயினும் பரிமேலழகர் உரை வகுத்த தொண்டினை நாம் அகமாறப் போற்றுகிறோம். அவருடைய விளக்கம் நமக்கு வழிகாட்டியாக உதவுகிறது.

இந்திய மாநிலப் பரப்பிலேயே — சங்க கால இலக்கியங்களின் அமைப்பும், துறையும், நுட்பஒட்பமும் தனித்தன்மை சான்றவை. வடமொழி முதலிய பழமைப் புகழ்சான்ற மொழிகளும் கனவிலும் எட்டமுடியாத நனிமுதுமரபைப் பெற்றது சங்க இலக்கிய மரபு. அதேபோல முத்தமிழ் மரபும் பிறமொழி உணரவும் முடியாத பழமையும் தனித்தன்மையும் வாய்ந்த புதுமை ஆக்கமரபாகும். உலக இலக்கியங்களுக்குள்ளேயே சங்க இலக்கியங்களின் தனித்தன்மையும் சீர்மையும் ஒண்மையும், தனிமரபும், படைப்பாற்றலும் ஈடுகூறமுடியாதது. இந்நுட்பத்தை உலகத்துக்குத் தெளிவாக நாம் உணர்த்த வேண்டும்

அந்தப் பழம் புதுமைமரபான சங்க இலக்கிய மரபினுள்ளும் பரிபாடல், *பத்துப்பாட்டு என்ற இருநூல்களின் அமைப்பும், நூன் மரபும், கற்பனையும், ஆக்கத்திறனும் தனிசீரிய தனித்தன்மையும் தமிழுக்கே உரிய சிறப்புத் தன்மையும் வாய்ந்தவை. இந்த உண்மையைத் தமிழுணர்ந்தாரும் தக்கவாறு தெளிந்தரியாம லிருப்பதே நனிவியப்புக்குரியது.

இனி இந்நூலின் இலக்கியச் சுவைபற்றி ஆராய்வோம். முதல் ஐந்து பரிபாடல்கள் இலக்கியச் சுவையோ, புலமை நுண்ணயமோ அற்ற செய்யுட்களாக உள்ளன. இவற்றுள் சில மெய்யுணர்வுக்

? பரிபாடலில் வையைபற்றி (6, 7, 10, 11, 12, 16, 20, 22) எட்டு பாடல்களும், திருமால்பற்றி (1, 2, 3, 4, 13, 15) ஆறு பாடல்களும், செவ்வேள்பற்றி (5, 8, 9, 14, 17, 18, 19, 21) எட்டு பாடல்களும் தற்போதுள்ளன. தெளிவில்லாமல் கிட்டிய 7 பரிபாடல்களும், 4 வெண்பாக்களும் வேறு உள்ளன. இவற்றுள் திருமால்பற்றி 1 பாடலும், வையைபற்றி 4 பாக்களும், மதுரைபற்றி 6 பாக்களும் உள. ஆயின் பழம் வெண்பா ஒன்று 8 திருமால் பற்றியும் 31 செவ்வேள் பற்றியும், 1 காடுகிழாள் பற்றியும், 26 வையைபற்றியும், 4 மதுரைபற்றியும் பாடப்பட்டிருந்த செய்தியை அறிவிக்கிறது.

"திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டுக் காடுகாட் கொன்று – மருவினிய
வையையிருபத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடற் றிறம்" பரிபாடல் எழுபது பாக்களா

லாயது என்று உண்மை இறையனார் களவியல் முதற் நூற்பா உரையாலும், தொல்காப்பிய செய்யுளியல் 149 நூற்பா உரையாலும் அறியலாம். இவ்வரையறையை விளக்குவதே மேற்பாடலாகும்.

கருத்துக்கள் காணப்படுகின்றன. அவை தனியாக ஆராய்வதற்குரியனவையாதலால் நாம் அவைபற்றிக் கருதவேண்டியதில்லை. பதின்மூன்றும் பாடலும் (நல்லெழுநியார் பாடியது) பதினான்காம் பாடலில் (கேசவனார் பாடியது) பிற்பகுதியும் (18-32) பதினைந்தாம் பாடலின் பெரும்பகுதியும் (30-ஆம் அடிதொட்டு 48-ஆம் வுரை மிகச்சிறப்பான விளக்கப்பகுதி. இப்பகுதி நீங்கலாக உள்ளவை) பதினேழாம பாடலின் சிற்சில அடிகளும் (நல்லழிசியார் பாடியது.) இலக்கியச் சிறப்பற்ற வெறுஞ் செய்யுட்பகுதியாக உள்ளது. பிறபாடல்கள் இலக்கியச் சுவையும், இயற்கை விளக்கநலமும், காதற்சுவையும் கமழ அமைந்துளளன.

இருபத்திரண்டாம் பரிபாடல் உவமை நலமும், வரலாற்றுண்மையும், புலமைச் சிறப்பும் பொருந்தி இனிய பாடலாகத் திகழ்கின்றது. ஆயின் இப்பாட்டின் இடையிடையிற் சில சீர்களும், இறுதிப் பகுதியும் சிதைந்து விட்டது பெரிதும் வருத்தம் விளைவிக்கின்றது

வையைப்பற்றிய இப்பரிபாடல், வையைத் தலைவனாகிய பாண்டியனின் போர்ச்சிறப்பும் பிறபண்பு நலங்களும் உவமையாக அமையத் துவங்குகிறது.

" பாண்டியன் ஒளிவீசும் போர்வாளோடு தன் யானைப்படையை வரிசையாக அணிவகுத்து நிற்கச் செய்வதைப்போல வானத்தில் முகிற்றிரள் வரிசையாக நெருங்கின !

பகையரசுகள் அழியும்படி வெற்றிகொள்ளும் அமையாத சீற்றங்கொள்ளும் அப் பாண்டியனின் போர்முரசு பேரோசையோடு ஆர்த்து முழங்குவதைப்போல அம் முகிற்றிரள் இடிமுழக்கத்தைச் செய்தன.

தன் பகைவர்மீது சீற்றங்கொண்டு பாண்டியனின் படைவில்லை வளைத்து விசையோடுவிடும் அம்புக் கூட்டங்களைப்போல வானிலிருந்து மழைத்துளிகள் சிதறின.

கண்ணைக் கூசச்செய்யும் ஒளிமிக்க பாண்டியனின் வேல்போல மிகுதியாக வானம் மின்னலை ஒளிரச்செய்தது,

அவன் கொடைத்திறம்போல வானம்பெய்த மழையானது, பாண்டியனின் படை எங்குப் நிறைந்து நெருங்கிப் பரவியதுபோல மழைவெள்ளம் எங்கும் மிகுந்து பரவிப் பாய்ந்தது, பாண்டியப் படையின் பேரார்வமிக்க ஊக்கத்தோடுகூடிய பாய்ச்சலைப்போல அவ்வெள்ளம் வயல்களிற் புகுந்து பாய்ந்தது. அவ்வெள்ள காட்டையலைத்தும், தரையைப் பிளந்தும் மணலை அள்ளியும் வையையில் பாய்ந்து வந்தது...

அப்போது மணமுரசு அடிக்கப்பட்டது, நீர் விளையாடலுக்குரிய அணிகலங்களோடு பெண்களும், இளைஞரும் மதுரையிலிருந்து புறப்பட்டு வையைக்கு வந்தனர்,

புலன்களை ஆற்றுவிக்கும் பத்துவகைத்துவர்களையும், புகைத்தற்குரிய மணப்பொருள்களையும், சந்தனத்தையும், நீரில் விசி எறிதற்குரிய கருவிகள், பொருள்களையும், கள்ளையும், அழகிய பூந்துகில் ஆடைகளையும் பலர் ஏந்தியவாறு பின் தொடர்ந்து வந்தனர்.

நெருங்கிய கைத்தொழில் திறம் அடைந்த அழகோடு பொலிந்த செம்மை நிறமுடைய பூமாலையினை பூண்டவராய், ஈரம் அமைந்த வெட்சிப்பூவின் இதழை அணிந்தமாலை பூண்ட தலைமாலையராய், தார் என்ற மாலை விளங்கும் முடியை உடையவராய், சுற்றப்பட்ட மாலை பொருந்திய மார்பை உடையவராய்க், குதிரையும் ஆனையானையும், மணிமிக்க அணிகலங்களைப் பூண்ட கோவேறு கழுதைகளிலூர்ந்து வந்து பூஞ்சோலை முழுதும் நிறையும்படி இளைஞரும மகளிரும் வந்து சேர்ந்தனர். வைகைக்கரை நிறையும்படி நெருங்கிக் கூடினர்.

வேலைகொண்டுபோர்புரியும் பேராண்மையாற்றலுடையவனைப் போன்ற ஆற்றலோடமைந்த வலிமையையும், காலில் பூண்டகழல் என்ற அணியையுமுடைய ஆடவரும், மணங்கமழும மலர்போலும் அம்பைஉடையவர் போல ஆற்றலும் அழகும் உடையமைந்தரும் தார் அணிந்த இளைஞரும் செய்த தவத்தின் பயன் மிகப்பெரியது என்று கண்டவர் கூறி வியக்க வையைக்கரையில் நெருங்கியிருந்தனர்.

கருமுகில் போல அழகு செய்யப்பெற்ற கூந்தலும், கயல் மீன் போன்ற கண்ணும், முருக்குமலரின் செவ்விதழ்போலும் கச்சணிந்த இளமுலையும், வகை வகையாகக் கோத்து அமைத்துச் செய்த அழகிய மேகலையும், அழகின் அணி எனக்கூறிவியக்கும்படி பொலியும் பற்களையும், இனியசிரிப்பையும் கொண்ட மகளிர் சீர் மிக்க அழகிய வையையாற்றுககு அழகு உண்டாக்கினரோ! அல்லது அவ்வழகியருக்கு இவ்வையையாற்றின் நீர் அணியின் வெள்ளம் அழகு உண்டாக்கியதோ! என்று ஆராய்ந்து தெளிவதற்கு மிக மிக அரிதாக அக்காட்சி அமைந்த சிறப்பைக்காண்பாயாக! மகளிர் ஆடவர் ஆகியவர்களையும், ஆற்றங்கரையையும் வையையும் சேர்க்கின்ற அழகு ஆய்வதற்கு அரியதாம்!

மண்பூசப் பெற்ற முழவின் (மத்தளம்) இனிய கண்ணின் இமிழ் என்னும் ஓசைக்கு எதிராக விண்ணினின்றும் எழும் இடியேற்றின் ஒலி மாற்றொலியாக முழங்கும்!

விரும்பப்படும் பாலைக்கோவையை நல்ல யாழின் இசை முழங்க, அதற்கு மாறாகப் பூங்காவில் பூக்களையுடைய கிளைகளினிடையே புள்ளிகளையும் கோடுகளையும் உடைய வண்டுக் கூட்டம் இன்னிசை எழுப்பும்!

வாயாலும் உட்காற்றாலும் ஊதி உண்டாக்கும் இசைக்கு அடிப்படையாக வேய்ங்குழலின் முறையான இனிய குழலிசை இயம்ப,

அதற்கெதிராக பூக்களின் மீதுள்ள தாதினை ஊதும் தும்பிகள் இனிய இசையைப் பலவாற்றால் இயம்பும்!

காற்று என்ற நட்டுவன் (கூத்தாட்டுவிப்பவன்) மெல்லிய கொத்துக்களாற் பொலிந்த பூங்கொடியாகிய கூத்தாடும் ஆடலரசியைத் துடிக்கூத்து ஆடுமாறு மென்மையாக அசையுமாறு செய்தான்.

அவ்விடத்தில் இவ்வாறு அவையெல்லாம் தத்தம் தொழில்களில் மாறுகொண்டு இயங்கும்படி செய்து குளிர்ந்த இனிய நீர் வெள்ளம் வருவையையாற்றின் கரையிலுள்ள திரு மருத முன்துறையில் நிகழ்ந்தன.

கொத்துக்களின் அழகு தழைத்திட அசையும் கருத்த கூந்தலையுடைய, குற்றமற்ற நீளமான மென்மையான தோளில் தாழ்ந்து தழையும் மலரோடுகூடிய துவளாத கொடிபோன்றவளின் நீண்டு தாழ்ந்த தொங்கல் உள்ளே இடும் முத்துக்களையுடைய அழகிய ஒப்பனை செய்யப்பட்ட சிலம்பு ——"

என்பது வரையிலும் பாடல் கிடைத்துள்ளது. பிற்பகுதிப் பாடல் கிடைக்கவில்லை.

பிற்பகுதியில் தலைவியின் ஊடலை நீக்கித் தலைவன் புனலாடி மகிழ்ந்த செய்தி குறிக்கப்பட்டிருக்கும் என நாம் உய்த்துணரலாம்.

" ஒளிரு வாட் பொருப்பன் உடல் சமத் திறுத்த
களிறு நிரைத் தவைபோற் கொண்மூ நெரிதர
அரசுபடக் கடந்த வானுற் சீற்றத் தவன்
முரசதிர் பவை போன் முழங்கு இடி பயிற்றி
ஒடுங்கா ருடன்று அவன் தானை வில் விசை
விடுங்கணை யொப்பிற் கதமுறை சிதறூஉக்
கண்ணொளி ரெஃகிற் கடிய மின்னி அவன்
வண்மை போல் வானம் பொழிந்த நீர் மண்மிசை
ஆறுது வந்து தொகு பீண்டி மற்றவன்
தானையி னூழி .... தாவுக்கத்திற்
போன நிலமெல்லாம் போரார் வயல்புகுத
... ... நீக்கி பபு ... ...
கான மலைத்தவரை கொன்று மணல பினறி
வான மலைத்த ... வ ... ...
... லைத்தவ மணரெ செறிதாத்
தானைத் தலைத்தலை வந்து மைந் துற்றுப்
பொறிவி யாற்றுறி துவர் புகை சாந்தம்
எறிவன வெக்குவ வீரணிக் கேற்ற
நறவணி பூந்துகினன் பல வேந்திப்
பிறதொழின ... ங் பின் பின் றொடரச்

செறிவினைப் பொலிந்த செம்பூங் கண்ணியர்
ஈரமை வெட்சி யிதழ்புனை கோதையர்
தாரார் முடியர் தகைகெழு மார்பினர்
மாவுங் களிறு மணியணி வேசரி
காவு நிறையக் கரை நெறி பீண்டி
வேல்ாற்று மொய்ம்பனின் விரைமல ரம்பினோன்
போலாற்று முன்பிற் புனைகழல் மைந்தரொடு
தாரணி மைந்தர் தவப்பயன் சான்மெனக்
காரணி கூந்தல் கயற்கட் கவரிதழ்
வாரணி கொம்மை வகையமை மேகலை
ஏரணி யிலங்க எயிற்று இன்னகையவர்
சீரணி வையைக்கு அணி கொல்லோ! வையைதன
நீரணி நீத்தம் இவர்க்கணி கொல்! லெனத்
தேருநர் தேருங்காற் தேர்தற்கு அரிதுகாண்!
தீரமும் வையையுஞ் சேர்கின்ற கண்கவின்
மண்களை முழ்வினின்கண் இமிழ்விற்கு
எதிர்வ பொருவி ... மேறு மா றிமிழ்ப்பக்
கவர்தொடை நல்யாழ் இமிழக் காவிற்
புகர்வரி வண்டினம் பூஞ்சினை மிளிர
ஊது சீர்த்தீங் குழல் இயம்ப மலர்மிசைத்
தாது ஊது தும்பி தவிப்பவ வியம்ப
...... துடிச்சீர் நடத்த வளிநடன்
மெல்லிணர்ப் பூங்கொடி மேவர நுடங்க
ஆங்கு அவை தத்தம் தொழில் மாறு கொள்ளும்
தீம்புனல் வையைத் திருமருத முன்துறையாற்
கோடுளர் குரற்பொலி யொலிதுயல் இருங்கூந்தல்
.. .. புரைதீர் நெடுமென்
தோள்தாழ்பு தழைமலர் துவளா வல்லியின்
நீடாழ்பு தோக்கை நித்தில வரிச்சிலம்பு...
.... " (பரி—22)

இயற்கையழகில் மிகுதியாக ஈடுபட்டு, இயற்கையின் உள்ளுறையை உணர்ந்து வாழ்பவர் புலவர் பெருமக்கள். இயற்கையை மக்களுக்கு அறிமுகப் படுத்தும்போது மக்கள் வாழ்க்கையையும், அவர்களைக் கவர்ந்த செய்திகள் – நிகழ்ச்சிகளையும் உவமையாக்கி விளக்கினால் தான் மக்கள் இயற்கையைப் பெரிதும் சுவைக்க முடியும் என்ற நுட்பத்தை யுணர்ந்து இப்பாடலைப் புலவர் இயற்றியுள்ளார். இப்பாடலை இயற்றிய புலவரின் பெயரையும் அறிதற்கியலவில்லை.

இவர் பாடலில் எதுகைத் தொடையமைதியும், மோனைத் தொடையமைதியும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

ஆற்றின் இயற்கைச் சுழல் அழகையும், மக்கள் திரளின் ஆரவார அழகையும் ஒப்பிட்டு ஆராய்ந்து ஆற்றினழகால் மக்கள் அழகு பெற்றுள்ளனரா? அன்றி, மக்கழகால் ஆற்றழகு சிறக்கிறதா?

என்று ஆராய்ச்சி செய்து புலவர், இரண்டு அழகுகளும் ஒன்றை யொன்று வெல்வதாக அமைந்திருப்பதை அறிவுறுத்தி, இரண்டில் எது சிறந்த அழகு எனத் தேருவது இயலாதது என்ற தீர்ப்பு வழங் கிய இடம் நனிசீரிய இடமாகும்.

இயற்கையை உயர்த்தி, மக்கள் குறையை உணர்த்திப்பாடும் புலவர்கள் உள்ளனர். மக்களையே மிக மதித்து, இயற்கையைப் பொருட்படுத்தாத உலகியற் புலவரும் உள்ளனர். இவ்விரு திறத் தினரும் ஒருவகையிற் பிழைபட்டே போகின்றனர். ஆயின், 22ஆம் பரிபாடலாசிரியராகிய புலவர் பெருந்தகையார் இயற்கையை யும் மாந்தரையும் ஒரே சீராக, ஒத்த மதிப்போடு போற்றுந்திறன் வியந்து பாராட்டுதற்குரியது. இந்நடுநிலைப் பண்பே சங்ககாலப் புலமை மரபின் தனிச்சீர்மையாகும்.

புலவரின் அரசியல் பற்றும், நாட்டுப்பற்றும் உவமையாட்சி யினால் நன்கு தெளிவாகும், புறப்பொருட் செய்திகளை இயற்கை விளக்கத்தில் இணைத்துப்பாடும் சங்ககால இலக்கியமரபு செவ்விதின் இப்பாடலில் கையாளப்பட்டுள்ளது.

முதலில் முகிற்றிரளின் கூட்டத்தையும், இடித்தலையும், மின் னலையும், மழை பெயலையும், பெயல்வெள்ளமாதலையும், வெள்ளம் திரண்டு வைகையில் பெருவெள்ளமாய் ஓடலையும் முறையேகூறி விட்டுப், பிறகு மதுரை மகளிரும் மைந்தரும் உடுத்தும் ஒப்பனை தொடுத்தும் ஊர்தியிலிவர்ந்தும் திருமருத முன்துறைக்கு வருதலைப் பாடி, இவர்கள் அழகைச் சிறப்பித்து, இயற்கையின் அழகைச் சிறப் பித்து, ஒப்புவமை ஆராய்ச்சி செய்து, பின் இயற்கையும் மக்களும் ஒத்த அழகினர் எனத் தீர்ப்பளித்துமுடித்த பாடலமைப்பு முறை ஓர் ஒழுங்கும் நிரலுமுடையதாக அமைந்துள்ளது. புலவரின் எண்ணும் ஆற்றலின் ஒழுங்கு முறைச் சிறப்பு இப்பாடலால் தெள்ளெனத் தெளிவாகும்.

முறையான எண்ணம், மரபு நலஞ்சேர் உவமை, சிறந்த கருத்து, இழுமென் மொழியமைப்பு சுவையான சொல்லாட்சி, அழ கார் யாப்புநலம் இடையறுது நடைபயிலும் ஓசையினிமை, தட்டு தடையற்ற பா நடை இத்துணைச் சிறப்பும் பொருந்திய இலக்கிய உணர்வுமிக்க இப்பாடல் சிறந்த பாவுக்கோர் எடுத்துக்காட்டாகும்;

முதலில் பருவகாலத்தையும், பின் அக்கால மழை நிகழ்ச்சியை யும், பின் நிகழிடத்தையும், அவ்விடத்து மாந்தரையும், அன்னூர் நீரணிவிழாப் புறப்பாட்டையும், வையைக்கரையையும், ஆங்கு ஆட வர் மகளிர் கூட்டணி உவகையும் முதல்—கரு—உரிப்பொருள் முறை மையில் ஆசிரியர் பாடிய தமிழ் மரபு வழி இலக்கியப்படைப்பு சிறப் போடமைந்துள்ளது.

பண்டைத் தண்டமிழ் இலக்கியங்களைச் சுவைக்கும் ஆற்றல் ஒரு தனித்திறன் சான்றது. அதற்கு ஆழ்ந்த அறிவும், ஆராய்ந்த

ஏவல் வினையில் வினாவின் ஆற்றல்

வித்துவான்: மோ. இசரயேல், எம். ஏ., டிப் (செர்மன்.)
[தமிழ் ஆய்வுத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.]

முன்னிலையும் ஏவலும்

தொல்காப்பியனார் முன்னிலை வினையையும் ஏவல் வினையையும் வேறுபடுத்திக் காட்டவில்லை. (தொல். சொல். 223, 224) ஏவல் என்னும் சொல்லை அவர் பயன்படுத்தி உள்ளார். (தொ. எ. 210, 224) எனினும், ஏவலில் வரும் வினைகள் யாவை எனக் குறிப்பிட்டிலர். நன்னூலார் ஏவல் வினையை முன்னிலை வினையினின்று ஓரளவு வேறுபடுத்தி உள்ளார் (நன். 335-337.)

ஏவல் முன்னிலையில் மட்டுமே வழங்கும்; ஒருமை, பன்மை வேறுபாடும் உண்டு. பண்டைக்காலத்தில் செல், வா, போ என்ற பல சொற்களும் (தொ. சொ. 450,) உண்ணுதி, உண்டி போன்ற

(312-ம் பக்கத் தொடர்ச்சி)

பேரறிவும், நுண்மான் நுழைபுலச் செம்மையும், உணர்வுச் செழுமையும், ஒப்பற்ற விரிந்த கற்பனைப் பேராற்றலும் அமைந்த மொழி வளமும் வேண்டும். இற்றைப் பருவத்தில் இனைய தகுதி-திறமைகள் மிக அருகியே காண்கின்றன. இளைஞர்கள் சங்க இலக்கியங்களை ஊர்கள்தோறும், தெருக்கள்தோறும் பரப்புவதற்கு முன்வர வேண்டும். உயரிய தமிழ்ச் சுவையை உலகம் உணர்வது அரிதாக உள்ளது. பரிபாடல், பத்துப்பாட்டு என்ற இரு தமிழ் நூல்களும் இன்னும் விரிவாக மக்களுக்கு அறிமுகப் படுத்தப்படவேண்டும்.

தமிழ்ப்புலமை மரபு காலந் கடந்து வென்று வாழ்வது. அதன் உரமுந்திறனும் அறனும் வளமும் ஊழி யூழியாகப் போற்றிக் காப்பாற்றப்படவேண்டிய தொன்றாகும். ஏனைய இலக்கியங்களை விளம்பரஞ் செய்வது போலத் தொல்பெரும் புகழ் சான்ற சங்க இலக்கியம் பரப்பப்படவில்லை. மேடைகள் தோறுஞ் சங்கத் தமிழின் இன்ப முழக்கம் நிறைக! நிறைக! அதற்காவன செய்ய இன் தமிழிளைஞர் விரைக! விரைக! தமிழ் மணம் நுகர நல்லோர் வருக! வருக! ! என வேண்டுகிறேன்.

இகர விகுதி பெற்ற சொற்களும் (தொ. சொ 223) ஒருமையிலும், உம் விகுதிபெற்ற சொற்கள் பன்மையிலும் வழங்கின.

இன்றையப் பேச்சு வழக்கில் செல், வா, போ, என்பன போன்ற சொற்கள் ஒருமையிலும், வாரும், செல்லும், வாருங்கள், செய்யுங்கள் என்பன போன்ற சொற்கள் பன்மையிலும், உயர்வு ஒருமையிலும் வழங்குகின்றன.

வினாவும் ஏவலும்.

பொதுவாக மக்கள் மனம் பிறர் ஏவுவதை விரும்புவதில்லை. அது ஏவலேயாயினும் அன்போடும், பணிவோடும் கூறப்பட வேண்டுமென எதிர்பார்க்கிறது ஆகவே மக்கள் பேச்சு வழக்கில் ஏவலை அடிக்கடி கட்டளையாகக் கூறாமல் தமது விருப்பத்தைத் தெரிவிக்கும் முறையில் மாற்றி அமைத்துக்கொள்ளுகின்றனர். எடுத்துக் காட்டாக "நாளை வா" என்பதற்குப் பதிலாக "நாளை வருகிறாயா"? என்று கேட்கிறோம். இது வினாவாக உள்ளது எனினும் தாம் விரும்பிய "வா" என்னும் ஏவலைக்குறித்து நிற்கின்றது. இதனை "மறைவான ஏவல்" எனலாம். எனவே, வினா ஏவலில் வெளிப்படையான கட்டளையை மறைத்து, மறைமுகமாகத் தாம் விரும்பும் ஏவலைத் தெரிவிக்கப் பயன்படுகிறது.

எ—டு "வாயேன்" "வா" என்றால் போதும்; எனினும் 'ஏன்' என்றும் வினாவைச் சேர்த்து அன்பு நிறைந்த ஏவலாக மாற்றி விடுகிறோம். அப்படியே "வாரும்" "வாருங்கள்" என்றால் போதும்; ஆனால் "வாருமேன்" "வாருங்களேன்" என்று கூறுகின்றோம்.

ஏவலோடு வினாவை இணைத்துத் தாம் விரும்பும் ஏவலை அன்போடு தெரிவிக்கும் இத்தகைய வழக்கு சங்க காலத்திலேயே காணக் கிடக்கின்றது. இலக்கண நூலார் இத்தகைய வழக்குகளில் சிலவற்றை விளக்க இயலாது இடர்ப்படுகின்றனர்.

இங்கு, இலக்கண ஆசிரியர்கள் ஆ, ஓ, ஏ, யா, எ ஆகியவற்றை வினாக்குறிகள் எனத் தெளிவுபடுத்தி உள்ளனர் (தொல். எழு. 32, 178; சொல், 256, 256, நன்-67) என்பது குறிப்பிடத்தக்கது.

1. மின்

தொல்காப்பியனாரும், நன்னூலாரும் "மின்" என ஒரு முன்னிலை விகுதியைக் குறிப்பிட்டுள்ளனர் (தொ. சொ. 224;

நன்-337.) நன்னூலார் அதனை ஏவல் என்றும் தெளிவுபடுத்திக் காட்டுகிறார். 'மின்' விகுதிக்கு எடுத்துக்காட்டாக, உண்மின், சென்மின் என்பனவற்றை உரையாசிரியர்கள் தருகின்றனர்.

நிற்க! தொல்காப்பியனார், நன்னூலார் போன்ற இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடாது போயினும் "செய்யும்" என்னும் வாய்ப் பாட்டு ஏவல்கள் சங்ககாலத்திலேயே வழங்கி உள்ளன என்பதை எவரும் மறுத்தல் இயலாது. அவர்கள் விகுதிகளைக் குறிப்பிடுங் கால் "உம்" என்பதை ஏவல் பன்மை விகுதியாகக் குறிப்பிட்டிருக் கலாம். ஆனால் அதனைக் குறிப்பிடாது விட்டு விட்டனர்.

உண்ம் (புறம் 178), கொண்ம் (புறம் 159), தின்ம் (புறம் 150) என்பன போன்ற சொற்கள் பல சங்ககாலத்தில் ஏவலில் வழங்கி உள்ளன. இவை தற்கால வழக்கில் உண்ணும், கொள்ளும், தின்னும் என்று வழங்கும் சொற்களின் உகரம் கெட்ட உருவமே யாகும்.

மேலும், சேர்மின் (புறம் 9), உண்மின், சென்மின் போன்ற சொற்கள் பல சங்ககாலத்தில் ஏவற்பன்மையில் வழங்கி உள்ளன.

தற்காலத் தமிழில் நீர்செய்யும், நீர்செய்யுமேன் என்பன போன்ற ஏவல் வினைகள் பயன்படுத்தபடுகின்றன.

செய்யுமேன் >
செய்மேன் >

செய்மின் என மாற்றம் அடைந்து வழங்கி இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. செய்யுமேன் என்னும் வினையில் ஏவல் குறித்து நிற்பது "உம்" விகுதியேயாகும் "ஏன்" வினாக்குறி. அதுவே என் என்று மாறிப் பின்னர் இன் எனத்திரிந்திருக்கலாம். எனவே சென்மின், உண்மின் என்பன.

செல் — உம் — ஏன்	உண் — உம் — ஏன்
> சென்ம் — ஏன்	> உண்ம் — ஏன்
> சென்மேன்	> உண்மேன்
> சென்மின்	> உண்மின்

என்ற படிகளை அடைந்து அந்த உருவங்களை அடைந்திருக்கலாம்.

"உம்" ஏவல் பன்மை விகுதியாம். இன்(> என் > ஏன்) வினைக்குறி ஏவலை அன்புடன் தெரிவிக்கப் பயன்படுகிறது. "மின்" என்னும் வடிவம், இலக்கண நூலார் "உம்" என்பதைப் பன்மை விகுதியாக்கண்டு கொள்ளாததால். பிறழ்பிரிப்பினால் (Metamalysis) கொண்ட தவறான விகுதியே யாகும்.

2. சின்

இலக்கண நூலார் "சின்" என்னும் ஒரு அசைநிலையைக் குறிப்பிட்டுள்ளனர். தொல்காப்பியனார் "சின்" அசைநிலையை முன்னிலைக்குச் சிறப்பாகக்கூறிப், பின்னர் மூவிடங்களிலும் வழங்கும் (தொல்—சொல் 274, 275) என்கிறார் நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் அதனை மூவிடங்களுக்கும் உரிய அசைநிலையாகக் குறிப்பிடுகின்றார் (நன்—441) சங்க இலக்கியங்களிலும் இது மூவிடங்களிலும் வழங்குகின்றது. இதன் வடிவம் "சின்" அன்று "இசின்" ஆகும் என்பதை நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டுகிறார். இதன் வடிவம் "இசின்' என்பது உரையாசிரியர் தரும் எடுத்துக்காட்டுக்களை நோக்குவார் எளிதில் உணர்ந்து கொள்ளுதல் இயலும்.

இது தன்மை, படர்க்கை இடங்களில் இறந்த காலத்திலும், முன்னிலையில் பெரும்பாலும் ஒருமை ஏவலிலும், சில இடங்களில் இறந்தகாலத்திலும் வழங்குதலைச் சங்க இலக்கியங்களில் காணலாம். இவண் யாம் விளக்கப்புகுவது ஏவல் ஒருமையில் வழங்கும் சில வடிவங்களேயாகும். வந்திசின் (புறம் 125) உரைத்திசின் (குறு 63) என்னும் சொற்கள் முன்னிலை ஏவல் ஒருமையில் வழங்குகின்றன. அவைகளைப் பிரிப்பின் வந்து—இசின், உரைத்து-இசின் எனக்கொள்ளலாம். 'இசின்' என்பதன் பழமை யாது எனக் கவனிப்போம். இது ஈ என்னும் அடிச்சொல்லைக் கொண்டு ஈகு (+ஏன்) என வழங்கிய துணை வினையாக இருக்கலாம்.

தற்காலத்தில் தந்திடேன், வந்தருளேன், செய்திடேன் என துணை வினையை ஏவலில அமைத்துக் குறிப்பிடும் பழக்கம் உள்ளது. எனவே வந்திசின், உரைத்திசின் என்ற சொற்கள் மிகப் பழங் காலத்தில் வந்தீகேன், உரைத்தீகேன் என வழங்கி இருக்கலாம். வந்து உரைத்து என்பவற்றிலுள்ள -ந்த்-, -த்- என்பன இங்கு காலங்காட்டுதல் இல்லை. ஈ என்னும் அடிச்சொல் ஏவலில் வழங்கும் என டாக்டர் சதாசிவம் அவர்களும் குறிப்பிடுகின்றனர்[1]. -கு- என்பது, ஆகு நோகு என்பனவற்றில் வருகின்றது போன்ற

சொல் துணை உருபு (formative suffix) ஆகும். இன் என்பது ஏன் என்பதன் திரிபாகும். ஏன் என்னும் வினைக்குறி இங்கும் ஏவலை அன்போடு தெரிவிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் வடிவம் காலப்போக்கில் மாறிவிட்டது. இன்று இலக்கண நூலார் தவறாகப் பிரித்து நமக்குச் 'சின்' என ஒரு அசைநிலையைத் தந்துள்ளனர்.

வந்து — * (கு) — ஏன்
\> வந்து — இகு — ஏன்
\> வந்து — இசு — ஏன்
\> வந்து — இசென்
\> வந்து — இசின்
\> வந்திசின்

*. துணைவினையடிச்சொல்; கு — முன்னர் விளக்கப்பட்டது *. > இ என்ற மாற்றம் ஒப்புமையாக்கத்தால் ஏற்பட்டிருக்கலாம். ஏனெனில் பெரும்பாலான துணைவினைகள் குறிய உயிரோடு தொடங்குகின்றன எ—கு அருள், இடு, விடு, இருங்கு > சு. அண்ணவினமாதல் (Palatalization); முன்னர் உள்ள அண்ணவின உயிரின் ஆற்றலால் மாறி இருக்கலாம் ஏன் > என் > இன் என மாற்றம் அடைந்திருக்கலாம்.

*. (கு) என்னும் துணைவினை (auxiliary verb) இப்பொழுது வழக்கிறந்து விட்டது. சின் (< இசின் < *கு > ஏன்) அசைநிலை என்று கூறும் நூற்பாவில், நன்னூலார் இருந்து, இட்டு போன்ற துணைவினைகளை அசைநிலைகள் எனக்கூறுவதும் (நன் 441) இம்முடிவை உறுதிசெய்து நிற்கின்றது.

3. மியா[2]

இதனை முன்னிலை அசைச்சொல் என இலக்கணநூலார் (தொல். சொல். 274; நன். 446) குறிப்பிடுகின்றனர். இதன் வழக்கிற்கு எடுத்துக்காட்டாகக் கேண்மியா, சென்மியா என்பவற்றைக் கூறலாம். இவை ஏவற் பொருளில் சங்க இலக்கியங்களில் வழங்குகின்றன. தொல்காப்பியனாரே இதனை ஒரு இடத்தில் "ஏவல் குறித்த உரையசை மியா" (எழு. 224) என்று குறிப்பிடுவதினின்று இவ்வுறுப்புடன் வழங்கும் சொற்கள் ஏவலைக் குறித்து நிற்கின்றன என்பது தெளிவு. சங்க இலக்கியங்களைப் பார்வையிடுங்கால் இது பெரும்பாலும் ஒருமையில் வழங்குகின்றது. இத்தகைய ஒருமை

வழக்குகளுக்கு அமைதி கூறுதல் இயலும். முதன் முதல் இது பன்மையில் வழங்கிப் பின்னர் உயர்வு ஒருமையில் (Honorific singular) இடம் பெற்றிருக்கலாம்.

முன்னர் விளக்கியபடி கேண்மியா, சென்மியா என்னும் சொற்களின் அமைப்பைப் பின்வருமாறு தெளிவுபடுத்தலாம்.

கேள் — உம் — யா	செல் — உம் — யா
> கேளும் — யா	> செல்லும் — யா
> கேண்ம் — யா	> சென் — யா
> கேண்மியா	> சென்மியா

இங்கு உள்ள யா வினாக்குறியே ஆகும்.[3] கேளும் செல்லும் என்று கூறுவதைவிட கேண்மியா சென்மியா என்று கூறுவதில் ஏவல் அன்போடு வெளிப்படுத்த முடிகிறது.

மியா (யா) முன்னிலையில் வரும் என்று குறிப்பிட்டிருப்பதும், தொல்காப்பியனார் அது ஏவல்குறிக்கும் என்று புலப்படச் செய்வதும் "உம்" என்னும் ஏவற் பன்மை விகுதி அல்லது அதன் வேறுபட்ட வடிவம் அங்கு உள்ளது என்பதை ஆய்வாளர் அறிந்து கொள்ளச் செய்யும். எனவே மியா (ம் x யா) ஒரு அசைநிலை அன்று என்பதும் தெளிவாகின்றது.

4. மோ

'மோ' என்பது ஒரு முன்னிலையசைச் சொல் என இலக்கண நூலார் (தொ-சொ. 274; நன். 446) குறிப்பிட்டு உள்ளார்கள். இது முன்னிலையில் வழங்கும் என்பது அவர்கள் கூற்றாலேயே தெளிவாகின்றது. இவ்வுறுப்பு உரைமோ (ஐங். 66) சென்மோ (புறம் 33) உள்ளுமோ (புறம். 48) மொழிமோ (குறு. 2) என்னும் சொற்களில் வழங்கக் காணலாம். இச்சொற்களிலும் "உம்" ஏவற்பன்மை விகுதியாக உள் ள து. 'ஓ' வினாக்குறி ஏவலை அன்புடன் உணர்த்தப் பயன்படுகின்றது.

பிறழ் பிரிப்பாலேயே "மோ" என்பதை அசைச் சொல் எனக் கொண்டிருக்கலாம். இவ்வுறுப்புடன் வழங்கும் சொற்கள் ஒருமையில் வழங்கினும் உயர்வு ஒருமையைக் குறிப்பனவே யாகும்.

செல் — உம் — ஓ
> செல்லும் — ஓ
> சென்ம் — ஓ
> சென்மோ

உன் — உம் — ஓ
உன்னும் — ஓ
உன்னுமோ

5. ஏ

முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்திலை மரபின் மெய்யூர்ந்து வருமே

(தொ. சொ. 451)

இந்நூற்பாவை நன்னூலார் அப்படியே எடுத்தாளுகின்றார். எனினும் தொல்காப்பியனார் இதனை "எச்சவியலில்" கூறியது போன்று அதற்கு ஒப்பான "பொதுவியலில்" கூறாது, முன்னிலையொருமை விகுதிகளைக் கூறும் நூற்பாவுக்கும், முன்னிலைப்பன்மை விகுதிகளைக் கூறும் நூற்பாவுக்கும் இடையில் (நன். 336) வைத்துள்ளார் உரையாசிரியர்கள் அதனை ஏவலைப்பற்றிக் கூறும் நூற்பாவாகவே கருதுகின்றனர்.

தொல்காப்பியனார் "முன்னிலை" என மட்டும் கூறினார் ஒருமையா பன்மையா எனத் தெளிவுபடுத்தவில்லை, சங்கரநமச்சிவாயர் "முன்னிலை ஏவல் முற்று" எனக்குறிப்பிடுகிறார். இளம்பூரணர் ஈ, ஏ என்னும் இசைச்சொற்கள் முன்னிலைக்கண் ஆனவை என்கிறார். இவண் ஆராய்வது முன்னிலைக்கண்வரும் ஏகாரம் பற்றியேயாம் அதன் வழக்கிற்கு உரையாசிரியர்கள் சென்மே, நின்மே என்னும் எடுத்துக்காட்டுகளைத் தருகின்றனர். சங்க இலக்கியங்களில் செய்ம்மே (புறம் 46), களைமே (புறம். 145), பிரிமே (ஐங். 308) என்னும் பல எடுத்துக்காட்டுக்களைக் காணலாம்.

இவைகளிலும் ஏவற்பன்மை விகுதி "உம்" உயர்வு ஒருமையில் வழங்குதல் காணத்தக்கது ஏ முன்னிலை இடைச்சொல் அன்று வினாக்குறியே ஆகும்; ஏவலை அன்புடன் தெரிவிக்கப் பயன்படுகிறது.

செய்—உம்—ஏ
> செய்யும்—ஏ
> செய்ம்—ஏ
> செய்ம்மே

பிரி—உம்—ஏ
> பிரியும்—ஏ
> பிரிமே

முடிவு

எனவே, ஏன், யா, ஓ, ஏ என்னும் வினாக்குறியீடுகள் ஏவல் வினைகளில் இணைக்கப்படுதல் தமிழ்மொழியில் காணப்படும் ஒரு இயல்பு. அங்ஙனம் இணைக்கப்படுங்கால் அவ்வேவல் வினைகளின் கட்டளைத்தன்மை குறைக்கப்படுகிறது. தாம் விரும்பும் ஏவலை அன்போடு தெரிவிக்க ஏவல் வினைகளோடு வினாக்குறியை இணைப்பது தமிழ் மரபாகும். அவ்வாறு இணைத்து ஏவலைத் திருந்திய (பண்பட்ட) முறையில் தெரிவிக்கும் பழக்கம் இன்றும் உள்ளது.

சங்ககாலம்

1.	உண்—உம்—ஏன்	> உண்ணுமேன்	> உண்மின்
2.	வந்து—ஈ(கு)—ஏன்	> வந்தீகேன்	> வந்திசின்
3.	கேள்—உம்—யா	> கேளும்யா	> கேண்மியா
4.	சேர்—உம்—ஓ	> சேருமோ	> சேர்மோ
5.	செய்—உம்—ஏ	> செய்யுமே	> செய்ம்மே

தற்காலம்

1.	வா—ஏன்	> வாயேன்
2.	வாரும்—ஏன்	> வாருமேன்
3.	வாருங்கள்—ஏன்	> வாருங்களேன்

அடிக்குறிப்புகள்.

1. Dr. Sathasivam, A (1958)
The Suffix " Cin " in cankam Tamil
Tamil Culture Vol. VII 140—14

2. மோ. இசரயேல் (1964)
" மியா " ஒரு அசைச்சொல்லா அன்றே ?
தமிழ்ப் பொழில் துணர் 40 மலர் 1. 4—8.

3. டாக்டர். மு. வரதராசனர் (1954) மொழியியற் கட்டுரைகள் பக்கம் 250.